# தாய்மொழி - தமிழ்

## தரம் - 1



# ஆசிரியர் வழிகாட்டி

## மூன்றாம் தவணை

(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது)

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

# தாய்மொழி - தமிழ்
# ஆசிரியர் வழிகாட்டி

(2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும்.)

## தரம் 01
## மூன்றாம் தவணை

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
**www.nie.ac.lk**

தாய்மொழி  தமிழ் - ஆசிரியர் வழிகாட்டி

தரம் 1

மூன்றாம் தவணை

முதலாம் பதிப்பு – 2026

© தேசிய கல்வி நிறுவகம்

சகல உரிமைகளும் உடையது

**ISBN**

**முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறைமொழிகள்,**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

**தேசிய கல்வி நிறுவகம்**

**இலங்கை**

**www.nie.ac.lk**

## கலைத்திட்டப் பங்களிப்பு

**ஆலோசனை**

**பேராசிரியர். மஞ்சுளா வித்தானபத்திரண (கலாநிதி)**
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**கலாநிதி தர்சன சமரவீர**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**பணிப்பு**
**ஆர்.எம். குமுதுமலி த சில்வா**
பணிப்பாளர்,
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட இணைப்பாக்கம்**

**நிர்மலா ஜயசிங்க**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**கலைத்திட்டக்குழு**

**நிர்மலா ஜயசிங்க**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

**வெளிவாரிப் வளப் பங்களிப்பு**

**வி.என்.எஸ்.உதயசந்திரன்**
**பணிப்பாளர் (ஓய்வு) தமிழ்மொழித்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்.**

**மொழியாக்கம்**
**எஸ். மனோகரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வு)**
**மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரி.**

**மொழிச் செம்மையாக்கம்**
**எம். எச். எம். யாகூத்**
**பிரதம செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு)**
**தேசிய கல்வி நிறுவகம்.**

**கணினி எழுத்தமைப்பு**
**ந. துஷாந்தன்**
**தேசிய கல்வி நிறுவகம்.**

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கைப் பொதுக் கல்வியின் நவீன மறுசீரமைப்பு முயற்சியானது கற்போர் ஒவ்வொருவரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தீர்க்கமான ஒரு பாதையை இலக்காகக் கொண்டுள்ளது .

தேர்ச்சிகள் சார்ந்த கற்றல் பகுத்தறிவு சிந்தனை, ஆக்கத்திறன், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள், தொழில்நுட்ப முனைப்பு, விழுமியப் பிரசைத்துவம் போன்ற பல துறைகளை வலியுறுத்தத்தக்க வகையில் கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு நடைமுறைகள் போன்றவற்றின் நவீனமயமாக்கம், இந்தக் கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் அடிப்ப டையாக அமைந்துள்ளது.

கல்வியலாளர்கள், பாடத்துறைச் சிறப்பறிஞர்கள், ஆசிரியர்கள் உட்படப் பல்வேறு தரப்பினர்களுடனான உடனுழைப்பு சார்ந்த உரையாடல்களின் ஊடாக, தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டு தரம் 1 இல் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் கலைத்திட்டங்களினதும் உரிய கற்கைச் சாதனங்களதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, விசேட கரிசனையுடன் செயற்பட்ட பிரதமர், கல்விச் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும் கல்வி வெளியிட்டு ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது.

மேலும் இப்பணியின் போது விசேட கரிசனையுடன் செயற்பட்ட தேசிய கல்வி நிறுவகத்தின் தாபனப் பேரவை, கல்விசார் அலுவல்கள் சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்பை நன்றியுடனும் கௌரவத்துடனும் நினைவு கூருகின்றேன் இப்பணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேசிய கல்வி நிறுவகப் பணியணியினர் அனைவருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

**பேராசிரியர் மஞ்சுளா வித்தானபத்திரண**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

# பிரதிப் பணிப்பாளர் நாயகம் வழங்கும் செய்தி

எமது நாட்டின் சகல பாடசாலைகளின் கலைத்திட்டத்திற்கான இனங்காணப்பட்ட இலகுவான கற்றல் துறைகள் காலத்திற்கு காலம் மாற்றமுறும் நாட்டின், உலகின் பேண்தகு அபிவிருத் தியின் சவால்களை வெற்றிக் கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேலெலச் செய்கின்றது. கற்றல் - கற்பித்தல் செயன் முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்துவதுடன் புதிய பாடங்கள் கலைத்திட்டத்தினுள் அறிமுகப்படுத்தப்படுகின்றது. அத்- துடன் மாற்றங்களுக்கமைய கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் காலத்திற்கு ஏற்ப அபி விருத்தி அடையும். அதற்கேற்ப 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய கல் விச் சீர்த்திருத்தக் கலைத்திட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2026ஆம் ஆண்டில் தரம் 1, 2027 ஆம் ஆண்டில் தரம் 2, 2028 அம் ஆண்டு தரம் 3, 2029 ஆம் தரம் 04 மற்றும் 2030 தரம் 05 ஆகிய ஆரம்பபிரிவுத் தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்படும். ஆரம்பக் கல்வித்துறை மாணவர்களுக்கான செயல்நூ ல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதற்கு அவசியமான வழிகாட்டல்களை ஆசிரியர்கள் வழங்குவர். மேலும் ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பாடம் தொடர்பான அறிவைப் பெறுவதோடு பெற்ற அறிவினை ஏற்ற சந்தர்ப்பத்தில் பிரயோகிப்பதற்கான திறன் விருத்திக்கு இக்கலைத்திட்டம் உதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும். 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான ஆற்றல் மேம்பாட்டுக்கும் அதனூ டாக மாணவர் ஆளுமை விருத்திக்கும் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுகள் உறுதுணையாக அமையும்.

புதிய கலைத்திட்ட சீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான முதன்மைப் பணிகளை மேற் கொண்ட கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்கள் வழங்கிய சேவையைப் பெரிதும் போற்றுகின்றேன். மேலும் இக்கலைத்திட்டத்துக்கான கற்றல் சாதனங்களைத் தயாரிப்பதில் பங்களிப்பு வழங்கிய நிறுவ- னத்தின் அனைத்து ஆளணியினருக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல்வேறுவகையிலும் வழங்கிய உதவிக- ளும் இக்கற்றல் சாதனங்கள் பண்புத்தரம் கொண்டதாகவும் உயரிய மேம்பாடு கொண்டதாகவும் மிளிர்வதற்கு உறுதுணையாக இருந்தது என்பதை மகிழ்ச்சியுடன் நினைவுபடுத்துகின்றேன்.

**கலாநிதி எஸ்.ஏ.டி சமரவீர**

பிரதிப் பணிப்பாளர் நாயகம்

மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்.

# அறிமுகம்

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைபடுத்தப்படவுள்ள கல்விச் சீர்த்திருத்தத்தின் முதலாம் தரத்தின் தாய்மொழிப் பாடக் கலைத்திட்டத்தை உங்கள் கரங்களில் மிகவும் கௌரவத்துடன் சமர்ப்பிக்கிறோம்.

முறைசார் கல்வி முறைமையில் முதலாம் தரம் என்பது பாடசாலைக் கல்வி முறையில் மிக முக்கிய இடத்தைப் பெறுவதோடு முதலாம் தரத்துக்குரிய கலைத்திட்டத்தினூடாகக் கிடைக்கின்ற பக்கபலமானது விசேடமானதாகும். மொழியைக் கற்றுக் கொள்வதற்கு அவசியமான அடிப்படையானது முதலாம் தவணையின் முன்மொழித்திறன் ஊடாக வழங்கப்பட்டது. சமூக மொழிப் பணியை பலமுள்ளதாக்கும் அடிப்படையையும் கல்விசார் மொழியைப் பலமுள்ளதாக்கும் அடிப்படையையும் சக்திமிக்கதாக்கும் வகையில் எழுத்துக்களை வாசித்தலின் போதும் எழுதுதலின் போதும் எழுத்துக்களை பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. இரண்டாம் தவணையின் போதும் சமூக மொழிப் பணிக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதோடு கல்விசார் மொழிப் பணியானது வாசித்தலின் போதும் எழுதுதலின் போதும் உயிர்க்குறிகளுடனான எழுத்துகள் ஆகியனவற்றைப் பயன்படுத்தவதற்கான சந்தர்ப்பங்களினுடாக வழங்கப்பட்டன. அவ்வாறே உரத்து வாசித்தலுக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டதன் ஊடாக வாசித்தலில் தேர்ச்சி பெறுவதற்கான அடிப்படைகள் ஏற்படுத்தப்பட்டன.

உங்களது வகுப்பிலுள்ள மாணவர்கள் முதலாம் மற்றும் இரண்டாம் தவணைகளின் போது விதந்துரைக்கப்பட்ட கற்றல்பேறுகளை எய்திக் கொண்டு மூன்றாம் தவணைக்கு ஆயத்தமாக இருப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். மூன்றாம் தவணைக்காகவும் சமூக மொழிப் பணி விருத்திக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதோடு கல்விசார் மொழிப் பணி விருத்திக்காக வாசித்தலின்போதும் எழுதுதலின்போதும் உயிர்க்குறிகளுடனான எழுத்துக்களின் பயன்பாட்டுக்கும் கருத்துள்ள வாக்கியங்களை எழுத்து வழக்கில் எழுதுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. மொழிப்பாடம் என்றவகையில் அதன் விடயப் பரப்பினுள் முதலாம் தரத்திலுள்ள மாணவரிடம் எதிர்பார்க்கின்ற ஆற்றல்களும் இரண்டாம் தரத்திற்கு உரியதான மொழிசார் ஆயத்தமும் எதிர்காலத்தில் மொழியை ஒரு பாடமாக பயில்வதற்கான அடிப்படையையும் வழங்குவதற்கான பாட உள்ளடக்கங்களும் மூன்றாம் தவணையிலும் உள்ளடக்கப்ட்டுள்ளன.

முதலாம் தரத்தின் இறுதியில் மாணவர்கள், மொழிப் பயன்பாட்டினையும் சொற்களஞ்சிய விருத்தி மற்றும் பயன்பாட்டினையும் மொழி பகுப்பாய்வினையும் இரசனை உணர்வுடனான சிந்தனையினையும் ஆக்கத்திறனையும் பாடங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பினையும் தாய்மொழிக்குரித்தான செயலடைவுத் தர நியமங்கள் மூலமாகக் கற்றல் பேறுகளை அடைவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

இதற்கமைய தாய்மொழியின் பிரதான நோக்கம் மற்றும் குறிக்கோள்கள் செயலடைவுத் தர நியமங்கள் ஊடாக முதலாம் தரத்தில் மாணவரிடம் எதிர்பார்க்கின்ற கற்றற் பேறுகளையும் அதன் எல்லைகள் தொடர்பாகவும் பெற்றுக் கொள்ளும் சரியான விளக்கம் மிக முக்கியமானதாகும்.

தாய்மொழிப் பாடத்தைக் கற்பிக்கும் போது மகிழ்வுடனும் இலகுவாகவும் வினோதச் செயற்பாடுகள் ஊடாகவும் உரிய விடயங்களை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான சூழலை அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்காக ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயன் முறையை நன்றாகக் கற்று எந்தவிதமான அழுத்தங்களும் இன்றித் தேவையான விடயங்களை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

விளையாட்டு அடிப்படையிலான கற்றல், உண்மைக் கற்றல் (Authantic) போன்றவற்றுக்கு முன்னுரிமை வழங்கி மிகவும் இரசனை உணர்வுடன் தாய்மொழிப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும். மாணவர்கள் கலை கலாசாரங்களிலிருந்து விலகிச் செல்லுகின்ற யுகத்தில் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது உரிய பாடவிடயத்தை இலக்கியப் பிரவேசத்துடன் முன்வைப்பதற்கு முதலாம் தரத்தின் தாய்மொழிப் பாடத்தினூடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விதத்தினை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். சகல மாணவர்களுக்கும் தாய்மொழிப் பாடத்தை மகிழ்வுடன் கற்றுக் கொள்வதற்கு பாடசாலை மாணவர் என்ற வகையில் மட்டுமன்றி சமூகப் பிரஜை என்ற வகையில் செயலாற்றுவதற்கும் அவசியமான சூழலை இப்பாடத்தின் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பீர்கள் என எதிர்பார்க்கின்றோம்.

**நிர்மலா ஜயசிங்க**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை,

தேசிய கல்வி நிறுவகம்.

## மூன்றாம் தவணைக்காக விதந்துரைக்கப்பட்ட கற்றல் பேறுகள்

- ஒத்த கருத்துச் சொற்களைப் பொருள் விளக்கத்துடன் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.
- எதிர்க்கருத்துச் சொற்களைப் பொருள் விளக்கத்துடன் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.
- வாசித்தலின் போதும் எழுதுதலின் போதும் உயிர்க்குறிகளுடனான எழுத்துகளைச் சரியாகப் பயன்படுத்துவார்.
- எழுத்து மொழியில் கருத்துள்ள வாக்கியங்களைச் சரியாக எழுதுவார்.
- நடைமுறைச் கருமங்களின் போது வாசித்தல் பழக்கத்தை வெளிப்படுத்துவார்.
- பந்திகளையும் கதைகளையும் உரையாடல்களையும் சரியாக உரத்து வாசிப்பார்.
- புத்தகமொன்றை வாசிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய அடிப்படை விடயங்கள் தொடர்பிலான விளக்கத்தை வெளிப்படுத்தி வாசிப்பார்.
- இலகுவான சிறுவர் பாடல்களை தாளத்துடன் பாடுவார்.
- செவிமடுத்து இரசித்த கதையொன்றினை நினைவுபடுத்திக் கூறுவார்.
- சிறுவர் கதையொன்றின் உள்ளடக்கத்தினூடாக சித்திரமொன்றை வரைந்து முன்வைப்பார்.
- சிறுவர் பாடலொன்றின் உள்ளடக்கத்தினூடாக சித்திரமொன்றை வரைந்து முன்வைப்பார்.
- படங்கள் சிலவற்றின் ஊடாக கதையொன்றினைக் கட்டியெழுப்பி முன்வைப்பார்.

மொழிப் பயன்பாட்டின் போது 'சொற்களஞ்சியம்' என்பது மிகவும் முக்கியமானது. இதனூடாக புதிய சொற்கள் பல சேர்வதோடு இச் சொற்களின் பொருள்விளக்கம் தொடர்பாகப் பயன்பாட்டு ரீதியான அறிவு விருத்தியுடைவதும் சந்தர்ப்பத்திற்கேற்ப இச்சொற்களைப் பயன்படுத்தும் ஆற்றல் விருத்தியடைவதும் அவசியமாகிறது.

**பாடவிடய உள்ளடக்கம்** **ஒத்தகருத்துச் சொற்கள்**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பண | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்று கைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| ALF | 15 ஒத்த கருத்துச் சொற்களைப் பொருள் விளக் கத்துடன் பொருத்த மாகப் பயன் படுத்துவார். | ‘எமது வீடு என்ற தொனிப் பொருளின் ஊடாக 30 சொற்களுக்கு மேற்படாதவாறு ஐந்து ஒத்த கருத்துச் சொற்களை உள்ளடக்கிய கதை /பந்தி<br>ஒத்த கருத்துச்சொற் கள் (அம்மா - தாய் அப்பா - தந்தை வீடு - இல்லம் பாதை - வீதி காடு - வனம்) உரத்து வாசித்தல் சரியான உச்சரிப்பு அவதானம் விளக்கம் வாக்கிய ஆக்கத்தை முன்வைத்தல் (வாக்கியத்தைக் கூறுதல்) | ▪ செவி மடுத்தல்<br>▪ பேசுதல்<br>▪ வாசித்தல் | 15.1 வழங்கப் படும் 30 சொற்களைக் கொண்ட வரிகளில் அடையாள மிடப்பட்டுள்ள சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த கருத்துச் சொற்கள் ஒன்றுவீதம் கூறுவார். | 15.1.1 சரியானதாக இருத்தல் |
| | | | | 15.2 ஒத்த கருத்துச் சொற் சோடிகள் ஐந்தில் இரண்டு சோடி<br>ஒத்த கருத்துச் சொற்களைத் தெரிவு செய்து அவற்றைக் கொண்டு ஒரு வாக்கியம் வீதம் எழுதுவார். | 15.2.1 கருத்து டையதா யிருத்தல் |

**செயற்பாடு 15.1 15.2 : ஒத்த கருத்துச் சொற்களைப் பொருள் விளங்கிப் பிரயோகிப்போம்.**

**காலம்** : 1 மணித்தியாலம்

**கற்றல் வளங்கள்** : படங்கள் அம்மா – தாய், அப்பா – தந்தை வீடு - இல்லம், வீதி – பாதை, காடு – வனம் போன்ற சொற்கள் எழுதப்பட்ட அட்டைகளும் அவற்றுக்குரிய பட அட்டைகளும்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படிமுறை 01**

- கீழுள்ள பந்தியைப் பலமுறை செவிமடுப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

**வீதி** அருகே உள்ள எமது **வீடு** அழகானது. **இல்லத்தின்** பின் பக்கம் **காடு** உள்ளதால் எமக்கு குளிர்ச்சி கிடைக்கிறது. **அப்பா** தினமும் பழைய **பாதை** ஊடாகக் காட்டுக்குப் போவார். **வனம்** மிகவும் அழகானது என அப்பா கூறுவார். அப்பா பலவகையான பழங்கள், கீரை வகைகளைக் கொண்டு வந்து **வீதி** அருகே உள்ள கடைக்குக் கொடுப்பார். புதிய பழங்களை எமக்கும் கொண்டு வந்து தருவார். அப்பா கொண்டு வரும் கீரை வகைகளில் **அம்மா** எமக்குச் சுவையான ஆரோக்கியமிக்க கஞ்சி செய்து தருவார். இலைக் கஞ்சி அருந்துவது எமது உடலுக்கு ஆரோக்கியமானது என **தாய்**, **தந்தை** தினமும் கூறுவர்.

,

- இந்தப் பந்தியில் உள்ளடக்கியுள்ள **அம்மா – தாய், அப்பா – தந்தை, வீடு - இல்லம் பாதை – வீதி, காடு - வனம்,** போன்ற சொற்களை விசேடமாகக் கொண்டு பந்தியின் உள்ளடக்கத்தை மாணவர்களுக்கு எளிமையாக விளக்குங்கள்.
- கீழ்வரும் படத்தைப் பெரிதாக்கி மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.
- இதற்காக கீழ்வரும் **QR Code** ஐப் பயன்படுத்தலாம்.



- விதந்துரைக்கப்பட்ட ஒத்த கருத்துச் சொற்களை அட்டைகளில் எழுதித் தயார் செய்து கொள்ளுங்கள்.
- இந்த ஒத்த கருத்துச் சொற்கள் வெளிப்படும் வகையில் படத்திலுள்ள நபர்களையும் இடங்களையும் பெயரிடுங்கள்.
- இதன்படி தயார் செய்யப்பட்ட ஒத்த கருத்துச் சொற்களை மாணவர்களுடன் கலந்துரையாடி படத்திலுள்ள உரிய இடங்களில் இணையுங்கள்.
- இந்த ஒத்த கருத்துச் சொற் சோடிகள் காணப்படும் சூழலைப் பற்றி எளிமையாக விளக்கி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- இதற்கிணங்க ஒரு சொல்லுக்கு ஒத்த கருத்தைத் தரும் பிறிதொரு சொல் உள்ளது என்பதை உதாரணத்துடன் முன்வையுங்கள்.

### படிமுறை 02

- இந்தப் பந்தியை உரத்து வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இதன்போது பங்கேற்று வாசித்தல் நுட்பமுறையைப் பயன்படுத்துங்கள்.

### படிமுறை 03

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- அம்மா, அப்பா, வீடு, பாதை, காடு ஆகிய படங்களை $5 \times 5$ அளவில் A4 அளவுடைய தாளில் வரைந்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு தொகுதி வீதம் வழங்குங்கள்.
- தீர்மானிக்கப்பட்ட சொற்கள் பத்தினை எழுதித் தயார்செய்யப்பட்ட கடதாசிகள் கொண்ட தொகுதி வீதம் குழுவினருக்கு வழங்குங்கள்.
- ஒவ்வொரு படத்துக்கும் உரிய சொற்கள் இரண்டினைத் தெரிந்து கூறுவதற்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

### படிமுறை 04

- ஒவ்வொரு குழுவினருக்கும் A3 தாளை வழங்குங்கள்.
- படிமுறை 3 இல் வழங்கிய படங்களைக் கடதாசியின் மீது வரிசையாக வைக்கும்படி சகல குழுவினரையும் வழிப்படுத்துங்கள்.
- இந்த ஒவ்வொரு படத்துக்கும் உரித்தான சொற்கள் இரண்டினையும் ஒவ்வொரு படத்துக்கும் முன்னால் வைக்கும்படி மாணவர்களை அறிவுறுத்துங்கள்.
- சரியாக வைக்கப்பட்டுள்ள படங்களையும் சொற்களையும் A3 தாளில் ஒட்டுவதற்கு வழிப்படுத் துங்கள்.
- மாணவர்கள் ஒட்டிய தாளிலுள்ள சொற்களைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- இச் சொற்களை மாணவர்களைக் கொண்டு வாசியுங்கள்.
- வாசித்த சொற்களை எழுத வழிப்படுத்துங்கள்.

### படிமுறை 05

- அம்மா, அப்பா, வீடு, பாதை, காடு போன்ற சொற்களைக் கூறுங்கள்.
- இந்தச் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொற்களைக் கூறுவதற்கு மாணவர்களுக்கு சந்தரப்பம் வழங்குங்கள்.

படிமுறை 06

- ஒவ்வொரு ஒத்த கருத்துச் சொற்களையும் பயன்படுத்திக் கருத்துள்ள வாக்கியங்களை ஆக்கி கூறும் விதத்தைச் செய்து காட்டுங்கள்.
- இந்த 5 ஒத்த கருத்துச் சோடிகளில் தெரிவு செய்த இரண்டு சொற் சோடிகளைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்களை உருவாக்கி முன்வைப்பதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| செயலடைவுத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| **15.1** தரப்பட்டுள்ள 30 சொற்களில் அடையாள மிட்ட சொற்கள் ஐந்தினை குறிக்கும் ஒத்தகருத்துச் சொற்களை விளங்கிக் கூறுவார். | **15.1.1** சரியாக இருத்தல் | 5 அல்லது 4 ஒத்த கருத்துச் சொற்களைக் கூறுவார். | 3 ஒத்த கருத்துச் சொற்களைக் கூறுவார். | 2 ஒத்த கருத்துச் சொற்களைக் கூறுவார். | 1ஒத்த கருத்துச் சொல்லைக் கூறுவார். |
| **15.2** தீர்மானிக் கப்பட்ட ஒத்த கருத்துச் சொற்சோடிகள் ஐந்தில் இரண்டு சோடிகளுக்கு கருத்துள்ள வாக்கியங்கள் அமைத்துக் கூறுவார். | **15.2.1** கருத்துள்ள தாயிருத்தல் | நான்கு வாக்கியங் களையும் கருத்துள்ள தாக அமைத்துக் கூறுவார். | மூன்று வாக்கியங் களை கருத்துள்ள தாக அமைத்துக் கூறுவார். | இரண்டு வாக்கியங் களை கருத்துள்ள தாக அமைத்துக் கூறுவார். | ஒரு வாக்கியத்தை கருத்துள்ள தாக அமைத்துக் கூறுவார். |

**பாடவிடய உள்ளடக்கம்**

**எதிர்க்கருத்துச் சொற்கள்**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| ALF | 16<br>எதிர்க் கருத்துச் சொற்களைப் பொருள் விளக்கத்-துடன் பொருத்த மாகப் பயன் படுத்துவார். | **"எமது வீடு"**<br>என்ற கருப் பொருளின் ஊடாக 30 சொற்களுக்கு மேற்படா தவாறு 5 எதிர்க் கருத்துச் சொற்களை உள்ளடக்கிய கதை /பந்தி<br>எதிர்க் கருத்துச் சொற்கள்<br>(மேல் - கீழ்<br>பெரிய - சிறிய<br>முன் - பின்<br>ஆரம்பம் - முடிவு<br>மேடு - பள்ளம்<br>சரியான உச்சரிப்பு<br>உரத்து வாசித்தல்<br>அவதானம்<br>விளக்கம்<br>வாக்கிய ஆக்கம்<br>முன்வைத்தல் | செவிமடுத்தல்<br>பேசுதல்<br>வாசித்தல் | 16.1<br>வழங்கப் படும் 30 சொற்களைக் கொண்ட வரிகளில் அடையாள மிடப்பட்டுள்ள 5 சொற் களுக்குப் பொருத்தமான எதிர்க்கருததுச் சொற்கள் ஒன்றுவீதம் கூறுவார். | 16.1.1<br>சரியாக இருத்தல் |
| | | | | 16.2<br>எதிர்க் கருத்துச் சொற் சோடிகள் ஐந்தில் இரண்டு சோடி எதிர்க் கருத்துச் சொற்களைத் தெரிவு செய்து அவற்றைக் கொண்டு ஒரு வாக்கியம் வீதம் எழுதுவார். | 16.2.1<br>கருத்துள்ள-தாயிருத்தல் |

**செயற்பாடு 16.1, 16.2, 16.3 : எதிர்க்கருத்துச் சொற்களைப் பொருள் விளங்கிப் பிரயோகிப்போம்.**

**காலம்** : 2 மணித்தியாலங்கள்

**கற்றல் வளங்கள்** : படங்கள், உயர்வு - தாழ்வு பெரிய சிறிய முன் பின் மேடு - பள்ளம் ஆரம்பம் - முடிவு போன்ற சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள் மற்றும் அவற்றுக்குரிய பட அட்டைகள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறைகள் :**

**படிமுறை 01**

- கீழுள்ள பந்தியை பலமுறை செவிமடுப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

தீபன் வீட்டின் **முன்** மாமரம் ஒன்று உள்ளது. அதில் **மேல்** கிளையிலும் **கீழ் உள்ள** கிளையிலும் மாம்பழங்கள் இருப்பதைப் தீபன் பார்த்தான். தீபன் வீட்டின் **பின்** இருந்த மாலனையும் தங்கையையும் அழைத்தான். மரத்தின் **மேல்** இருந்த மாம்பழத்தை மரத்தின் **கீழ்** இருந்து தீபன் காட்டினான். மாலன் நீண்ட தடியொன்றைக் கொண்டு வந்தான். தடியின் **ஆரம்பப்** பகுதியில் கொக்கை ஒன்றைக் கட்டினான். தடியின் **முடிவுப்** பகுதியைப் பிடித்து மாம்பழங்களைப் பறித்தான். மாலனும் தங்கையும் பழங்களை **சிறிய** பழங்கள் **பெரிய** பழங்கள் என வேறாக்கினர். மூவரும் பழங்களைப் பகிர்ந்து உண்டனர்.

- இந்தக் கதையில்உள்ளடக்கப்பட்டுள்ள உயர்ந்த - தாழ்ந்த , பெரிய - சிறிய ,முன்னால்- பின்னால், மேல் - கீழ் ,ஆரம்பம் - முடிவு போன்ற சொற்களை விசேடமாகக் குறிப்பிட்டு, கதையின் உள்ளடக்கத்தை எளிமையாக விளக்குங்கள்.
- கீழுள்ள படத்தை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.
- இதற்காக கீழுள்ள **QR Code** ஐப் பயன்படுத்தலாம்.
-



- விதந்துரைக்கப்பட்ட எதிர்க்கருத்துச் சொற்களை அட்டைகளில் எழுதி தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.
- இந்த எதிர்க்கருத்துச் சொற்கள் வெளிப்படும் வகையில் படத்தில் உள்ள நபர்களையும் பொருட்களையும் இடங்களையும் பெயரிடுங்கள்.
- இதனூடாகத் தயார் செய்யப்பட்ட எதிர்க்கருத்துச் சொற்களை மாணவர்களுடன் கலந்துரையாடி படத்தில் உரிய இடங்களில் இணையுங்கள்.
- இந்த எதிர்க்கருத்துச் சொற்கள் காணப்படும் சூழல் தொடர்பாக இலகுவாக விளக்கி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

### படிமுறை 02

- இந்த பந்தியை உரத்து வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இதன்போது பங்கேற்று வாசித்தல் நுட்பமுறையைப் பயன்படுத்துங்கள்.

### படிமுறை 03

- மீண்டும் ஒருமுறை படத்தில் இணைக்கப்பட்டுள்ள எதிர்க்கருத்துச் சொற்களைக் காட்டி அவற்றை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- இந்த சொற்சோடிகளை ஒன்றாக இணைத்து பலமுறை மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.
- ஒவ்வொரு சொல் குறித்தும் காணப்படும் எதிர்க்கருத்துச் சொற்கள் ஒன்று வீதம் குறிப்பிட மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 04

- ஒவ்வொரு எதிர்க்கருத்துச் சொல் தொடர்பாக கருத்துள்ள ஒவ்வொரு வாக்கியத்தை அமைக்கும் விதத்தை நிகழ்த்திக் காட்டுங்கள்.
- இந்த எதிர்க்கருத்துச் சொற்களில் இரண்டு சொற்களைத் தெரிவு செய்து ஒவ்வொரு வாக்கியத்தை உருவாக்கி முன்வைக்க சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| **16.1** தரப்பட்டுள்ள 30 சொற்களில் அடையாளமிட்ட சொற்கள் ஐந்தினை குறிக்கும் எதிர்க்கருத்துச் சொற்களை விளங்கிக் கூறுவார். | **16.1.1** சரியாக இருத்தல் | 5 அல்லது 4 எதிர்க்-கருத்துச் சொற்களைக் கூறுவார். | 3 எதிர்க் கருத்துச் சொற்களைக் கூறுவார். | 2 எதிர்க் கருத்துச் சொற்களைக் கூறுவார். | 1 எதிர்க் கருத்துச் சொல்லைக் கூறுவார். |
| **16.2** விதந்துரைக் கப்பட்ட எதிர்க் கருத்துச் சொற் சோடிகள் ஐந்தில் இரண்டு சோடிகளுக்கு கருத்துள்ள வாக்கியங்கள் அமைத்துக் கூறுவார். | **16.2.1** கருத்துள்ள தாயிருத்தல் | நான்கு வாக்கியங் களையும் கருத்துள்ள தாக அமைத்துக் கூறுவார். | மூன்று வாக்கியங் களை கருத் துள்ளதாக அமைத்துக் கூறுவார். | இரண்டு வாக்கியங் களை கருத் துள்ளதாக அமைத்துக் கூறுவார். | ஒரு வாக்கியத்தை கருத்துள்ள தாக அமைத்துக் கூறுவார். |

மொழிப் பயன்பாட்டின் போது மிக முக்கியமாக அமைகின்ற ஒரு காரணியானது எழுத்துக-ளின் பயன்பாடு பற்றிய அறிவாகும். முதலாம் தரத்தின் முதலாம் இரண்டாம் தவணைக-ளின் போது உயிர்க்குறிகள் அற்ற எழுத்துகளை எழுதுதல் வாசித்தல் திறன்களை ஏற்ப டுத்துவதும் குற்றுகளைக் கொண்ட எழுத்துகளை எழுதுவதும் வாசிப்பதும் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. உயிர்க்குறிகளை அறிமுகம் செய்வது மூன்றாம் தவணையில் இடம்பெறும். முதலாம் தரத்தில் அறிமுகம் செய்வதற்குத் விதந்துரைக்கப்பட்ட உயிர்க்குறிகள் அடங்கிய எழுத்துகளையும் சொற்களையும் வாசிப்பதும் நான்கு றூள், ஒற்றை றூள் கொப்பிகளில் எழு-துவதும் இடம்பெறும். உயிர் மெய் எழுத்துகளுக்கு உயிர்க் குறிகளைப் பயன்படுத்தி எழுத் துகளை எழுதுவதும் இவ்வெழுத்துகளின் அமைப்பை அறிமுகம் செய்வதும் இதன்போது இடம்பெறும். இதனூடாக வாசித்தலின் போதும் கருத்துள்ள சொற்களை எழுதும் போதும் உயர்க்குறிகளைச் சரியாகப் பயன்படுத்துவது அவசியமானது என்பது எதிர்பார்க்கப்படுகிறது. கீழ்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடச் செய்வதன் ஊடாகச் சரியாக உயிர்க் குறிகளைப் பயன்படுத்துவற்கான சந்தர்ப்பங்களை வழங்க முடியும்.

## எழுத்துகளை அறிமுகஞ் செய்தல்

மூன்றாந் தவணையில் பின்வரும் எழுத்துகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

**உயிர் மெய் எழுத்துகள் (விசிறி) - 16**

கி, சி, டி, ணி, தி, நி

பி, மி, யி, ரி, லி, வி

ழி, ளி, றி, னி

**உயிர் மெய் எழுத்துகள் (விசிறியும் சுழியும்) - 15**

கீ, சீ, டீ, ணீ, தீ, நீ

பீ, மீ, யீ, ரீ, லீ, வீ

ளீ, றீ, னீ

**எழுத்தை அறிவோம் - 4 பயிற்சிப் புத்தகத்தில் 31 உயிர் மெய் எழுத்துகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.**

**பாடத்திட்ட உள்ளடக்கம் உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்)**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்று கைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| ALF | 21 வாசிக்கும் போதும் எழுதும் போதும் விசிறி, விசிறியும் சுழியும் கொண்ட சொற்களை சரியாகப் பயன்படுத்து வார். | • உயிர்மெய் எழுத்துகள. (விசிறி,விசிறி யும் சுழியும்)<br>• குறில் எழுத்துகள்<br>• நெடில் எழுத்துகள்<br>• குற்று<br>• சரியான உச்சரிப்பு<br>• வாசித்தல்<br>• எழுதுதல்<br>• கேட்டு எழுதுதல்<br>• எழுது வதற்கான ஆயத்தம் (சரியாக அமர்தல் புத்தகங்களை வைத்திருத்தல் பென்சிலைப் பிடித்தல்)<br>• நான்கு கோட்டுப் புத்தகம்<br>• ஒற்றை றூள் கொப்பியில் எழுதுதல் | • செவி மடுத்தல்<br>• பேசுதல்<br>• வாசித்தல்<br>• எழுதுதல் | 21.1 விதந்துரைக் கப்பட்ட 31 உயிர்மெய் எழுத்துகளை (விசிறி,விசிறி யும் சுழியும்) பொறிமுறைத் திறனுடன் நான்கு கோட்டில் எழுதுவார்.<br>21.2 விதந்துரைக் கப்பட்ட 31 உயிர்மெய் எழுத்துகளை (விசிறி,விசிறி யும் சுழியும்) கொண்ட எழுத்துகள் ஒன்று வீதம் சரியாக உச்சரி-த்து உரத்து வாசிப்பார். | 21.1.1 உரிய உறுப்பு களைக் கொண்டி ருத்தல்<br>21.1.2 சரியான அமைப்பு டனிருத்தல்<br>21.1.3 சரியான அளவுட னிருத்தல்<br>21.1.4 சரியான திசைமுகம் பேணப்படல்<br>21.2.1 சரியான தாயிருத்தல்<br>21.3.1 உரிய உறுப்பு களுடனிருத்-தல்<br>21.3.2 சரியான அமைப் புடனிருத்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | • பொறிமுறை எழுதுதல் திறன் (அளவு, அமைப்பு, திசைமுகம், ஏற்ற இடை வெளி, புனிதம்) கொண்ட சொற்கள் எழுத்-துகளின் ஒழுங்கமைவு<br>• கற்ற எழுத்து களைக் கொண்ட சொற்கள் எழுத்துக்களின் ஒழுங்கமைவு<br>• விசிறி<br>விசிறியும் சுழியும்<br>• உயிர் மெய் எழுத்துகள் (விசிறி,விசிறி யும் சுழியும்) உள்ள இரண்டு எழுத்துச் சொற்கள்<br>• விசிறி விசிறி யும் சுழியும் உள்ள மூன்று எழுத்துச் சொற்கள் | | 21.3 விதந்துரைக் கப்பட்ட 31 உயிர் மெய் எழுத்துகள் (விசிறி,விசிறி யும் சுழியும்) கொண்ட நான்கு எழுத்து களுக்கு மேற்படாத சொற்கள் இரண்டு வீதம் நான்கு கோட்டுக் கொப்பியில் கேட்டு எழு-துவார்.<br><br>21.4 விதந்துரைக் கப்பட்ட 31 உயிர் மெய் எழுத்துகள் (விசிறி,விசிறி யும் சுழியும்) ஒன்று வீதம் பொறிமுறை திறன்களுடன் ஒற்றை றூளீல் எழுதுவார். | 21.3.3 சரியான அளவுட னிருத்தல்<br><br>21.3.4 சரியான திசை முகத் துடனிருத்தல்<br><br>21.3.5 உரிய இடை வெளிகளைக் கொண்டி ருத்தல்<br><br>21.4.1 உரிய உறுப்பு களுடனி ருத்தல்<br><br>21.4.2 சரியான அமைப் புடனிருத்தல்<br><br>21.4.3 சரியான அளவுடனி ருத்தல்<br><br>21.4.4 சரியான திசைமுகத்-துடனிருத்தல்<br><br>21.4.5 சரியான இடைவெளி இருத்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | • உயிர் மெய் எழுத்துகள் (விசிறி,விசிறியும் சுழியும்) உள்ள நான்கு எழுத்துச் சொற்கள் | | 21.5 விதந்துரைக் கப்பட்ட 31 உயிர் மெய் எழுத்துகள் (விசிறி,விசிறியும் சுழியும்) ஒன்று வீதம் சரியாக உச்சரி-த்து உரத்து வாசிப்பார்.<br><br>21.6 விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழு-த்துகளை (விசிறி,விசிறியும் சுழியும்) நான்கு எழுத்து களுக்கு மேற்படாத சொற்கள் இரண்டு வீதம் ஒற்றை றூளில் கேட்டு எழுதுவார். | 21.6.1 உரிய உறுப்புக் களுடனிருத்தல்<br><br>21.6.2 சரியான அமைப் புடனிருத்தல்<br><br>21.6.3 சரியான அளவுடனிருத்தல்<br><br>21.6.4 சரியான திசைமுகத் துடனிருத்தல்<br><br>21.6.5உரிய இடைவெளி களைக் கொண்டிருத்தல் |

**செயற்பாடு 21.1, 21.2, 21.3, 21.4, 21.5, 21.6 விசிறியை இனங்காண்போம்;**
**சரியாகப் பயன்படுத்துவோம்.**

## படிமுறை 01

- கீழ்வரும் பாடலை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

**வெல்வோம்**

**வியந்து உலகைப் பார்ப்போமே**
**விவேகம் கொண்டு உயர்வோமே**

**விடுகதை சொல்லி மகிழ்வோமே**
**விந்தைகள் பலவும் செய்வோமே**

**பிறருக்கு உதவி செய்வோமே**
**பிரியமாய்ப் பேசி மகிழ்வோமே**

**தித்திக்கும் தமிழைப் பயில்வோமே**
**திறமையைக் காட்டி வெல்வோமே**

- மேலே தரப்பட்டுள்ள பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலை இரண்டு முறை பாடிக் காட்டுங்கள்.

## படிமுறை 02

- மேலே தரப்பட்டுள்ள பாடலை பலமுறை மாணவர்களுடன் இணைந்து பாடுங்கள்.
- இந்தப் பாடலில் முதலில் வரும் 'இ' ஒலியுடனான சொல்லைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- இந்த சொல்லை மாணவர்களுடன் இணைந்து பலமுறை உச்சரியுங்கள்.
- இதன் போது சொல்லின் ஆரம்பத்திலுள்ள 'இ' ஒலியைச் சுட்டிக்காட்டுங்கள்.
- சொல்லின் ஆரம்பத்தில் 'இ' ஒலியுடன் கூடிய பாடலிலே வருகின்ற இன்னொரு சொல்லை கூறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவ்வாறே பாடலிலுள்ள 'இ' ஒலியுடனான சொற்களைத் தெரிந்து கோடிடுங்கள்.
- இச்சொற்களை குறித்துக் கொள்ளுங்கள்.
- பின்னர் இச்சொற்களை உரத்துப் பலமுறை மாணவர்களுடன் வாசியுங்கள். இதன் போது ஒலிக்கின்ற 'இ' ஒலியைச் சுட்டிக்காட்டுங்கள்.

**படிமுறை 03**

- மேலே தரப்பட்டுள்ள சொற்களில் 'இ' ஒலிக்காக 'இ' எழுத்துக்குப் பதிலாக வேறொரு குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடுங்கள்.
- இந்தக் குறியீடு **விசிறி** என அழைக்கப்படும் என்பதைக் கூறுங்கள்.
- இக்குறியீட்டைக் கரும்பலகையில் எழுதிக் காட்டுங்கள்.

| ி |
|---|

- மேலே தரப்பட்டுள்ள குறியீடு விசிறி எனவும் இதன் ஒலி 'இ' எனவும் கூறுங்கள்.
- பாடலிலிருந்து எழுதப்பட்ட சொற்களில் விசிறி காணப்படுகின்ற எழுத்துகளின் கீழ்க் கோடிடுங்கள். (இதனை மாணவர்களுடன் கலந்துரையாடிச் செய்யுங்கள்).
- இந்த எழுத்துகளை உச்சரித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களுடன் இவ்வெழுத்துகளைப் பலமுறை உச்சரியுங்கள்.
- மாணவர்களை இவ்வெழுத்துகளைத் தனித்து உச்சரிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதன் பின்னர் சொற்களை உச்சரித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களுடன் இச்சொற்களை பலமுறை உச்சரியுங்கள்.
- மாணவர்களை இச்சொற்களைத் தனித்து உச்சரிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படிமுறை 4**

- எழுத்துகள் சிலவற்றை விசிறியைப் பயன்படுத்தி நான்கு கோடுகளில் எழுதும் விதங்களைச் செய்து காட்டுங்கள்.
- **எழுத்தை அறிவோம் 4** புத்தகத்தில் உள்ள விசிறி பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துகளைப் பார்த்து எழுதும் பயிற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- 'இ' ஒலியுடன் கூடிய எழுத்துகளைக் கேட்டு எழுதுவதற்காக வழங்குங்கள்.
- அதற்காக நான்கு கோட்டுக் கொப்பியைப் பயன்படுத்துங்கள்.
-

**படிமுறை 5**

- விசிறி உள்ள எழுத்துகளைக் கொண்டுள்ள சொற்களை நான்கு கோடுகளில் எழுதிக் காட்டுங்கள்.
- சொற்களை நான்கு கோட்டில் எழுதும் பயிற்சிகளில் ஈடுபடுத்துங்கள்.
- அதன்போது எழுத்துகளுக்கிடையில் ஏற்ற இடைவெளி விட்டு எழுதுவதற்கு வழிப்படுத் துங்கள்.
- பார்த்து எழுதிய சொற்களை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- விசிறியுடன் கூடிய எழுத்துகளைக் கொண்ட சொற்களை வாசிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- விசிறியுடன் கூடிய எழுத்துகளைக் கொண்ட சொற்களை கேட்டு எழுதுவதற்கு வழங்குங்கள்.
- இதற்காக நான்கு கோட்டுக் கொப்பியைப் பயன்படுத்துங்கள்.

### படிமுறை 6

- விசிறியுள்ள சொற்களை ஒற்றை றூளில் எழுதிக் காட்டுங்கள்.
- இவ் எழுத்துகளை உச்சரிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட எழுத்துகள் சிலவற்றிற்கு விசிறிடன் கூடிய அட்டைகளை இட்டு இந்த எழுத்துக்களை ஒலிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதற்காக உங்கள் உதவியை வழங்குங்கள்.

### படிமுறை 7

- விசிறியுள்ள சொற்களை ஒற்றை றூளில் எழுதுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- **எழுத்தை அறிவோம் 4** புத்தகத்தில் உள்ள விசிறி பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை ஒற்றை றூளில் எழுதும் பயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- பின்வரும் சொற்களை வாசிப்பதற்கும் பார்த்து எழுதுவதற்கும் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

  உதாரணம் : கிளி, திகதி, நிழல், பின்னல், விசிறி

- இந்த எழுத்துகளை எழுதும் போது விசிறியைச் சரியாகப் பயன்படுத்துவதற்கும் எழுத்துக்களுக்கிடையில் ஏற்ற இடைவெளி விடவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- விசிறியுள்ள இரு எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கேட்டு எழுதுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்

  உதாரணம் : கிளி, பிடி, அணி, கரி, எலி, கறி, கனி

### படிமுறை 8

பின்வரும் சொற்களை வாசிப்பதற்கும் பார்த்து எழுதுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

உதாரணம் : சிறகு, திகதி, பின்னல், தயிர், பல்லி,

- இந்த எழுத்துகளை எழுதும் போது விசிறியைச் சரியாகப் பயன்படுத்துவதற்கும் எழுத்துகளுக்கிடையில் ஏற்ற இடைவெளி விடவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- விசிறியுள்ள மூன்று எழுத்துகளைக் கொண்ட சொற்களை கேட்டு எழுதுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  உதாரணம் : சிற்பி, நிறம், நிலவு

### படிமுறை 9

- விசிறியுள்ள இரண்டு, மூன்று எழுத்துகளைக் கொண்ட சொற்கள் இரண்டு வீதம் கட்டியெழுப்புவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இதற்காக ஆக்கப்பூர்வமானதும் மகிழ்ச்சிகரமானதுமான செயற்பாடுகளைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

**வாசிப்புப் புத்தகத்திலுள்ள பாடங்களிலுள்ள விசிறியுடன் கூடிய எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கண்டறிந்து வாசிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.**

**செயற்பாடு 21.1 21.2 21.3 21.4 21.5 21.6 விசிறியும் சுழியும் இனங்காண்போம்; சரியாகப் பயன்படுத்துவோம்.**

## படிமுறை 1

- கீழ்வரும் பாடலை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

**நீங்காப் புகழ்**

**நீரைத் நிறையக் குடித்திடு**
**நீண்ட ஆயுள் பெற்றிடு**

**வீட்டில் பாடம் படித்திடு**
**வீட்டைச் சுத்தம் செய்திடு**

**நீதி நெறியில் நடந்திடு**
**நீங்காப் புகழ் பெற்றிடு**

- மேலே தரப்பட்டுள்ள பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலை இரண்டு முறை பாடிக் காட்டுங்கள்.

## படிமுறை 2

- மேலே தரப்பட்டுள்ள பாடலைப் பலமுறை மாணவர்களுடன் இணைந்து பாடுங்கள்.
- இந்தப் பாடலில் முதலில் வரும் 'ஈ' ஒலியுடனான சொல்லைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- இந்தச் சொல்லை மாணவர்களுடன் இணைந்து பலமுறை உச்சரியுங்கள்.
- இதன் போது சொல்லின் ஆரம்பத்திலுள்ள 'ஈ' ஒலியைச் சுட்டிக்காட்டுங்கள்.
- சொல்லின் ஆரம்பத்தில் 'ஈ' ஒலியுடன் கூடிய பாடலிலே வருகின்ற இன்னொரு சொல்லை கூறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவ்வாறே பாடலிலுள்ள 'ஈ'ஒலியுடனான சொற்களைத் தெரிந்து கோடிடுங்கள்.
- இச்சொற்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- இதன் பின்னர் இச்சொற்களை உரத்து பலமுறை மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். இதன் போது ஒலிக்கின்ற 'ஈ' ஒலியைச் சுட்டிக்காட்டுங்கள்.

## படிமுறை 3

- மேலுள்ள சொற்களில் ‘ஈ’ ஒலிக்காக ‘ஈ’ எழுத்துக்குப் பதிலாக வேறொரு குறியீடு பயன்படுத் தப்பட்டுள்ளதைக் கூறுங்கள்.
- இந்த குறியீடு **விசிறியும் சுழியும்** என அழைக்கப்படும் என்பதைக் கூறுங்கள்.
- விசிறியும் சுழியும் குறியீட்டை கரும்பலகையில் எழுதிக் காட்டுங்கள்.

| ீ |
|---|

- மேலுள்ள குறியீடு விசிறியும் சுழியும் எனவும் இதன் ஒலி ‘ஈ’ எனவும் கூறுங்கள்.
- சொற்களில் விசிறியும் சுழியும் காணப்படுகின்ற எழுத்துகளின் கீழ் கோடிடுங்கள்.
- மாணவர்களுடன் இவ்வெழுத்துகளைப் பலமுறை உச்சரியுங்கள்.
- மாணவர்களை இவ்வெழுத்துகளைத் தனித்து உச்சரிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதன் பின்னர் சொற்களை உச்சரித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து இச்சொற்களைப் பலமுறை உச்சரியுங்கள்.
- மாணவர்கள் இச்சொற்களைத் தனித்து உச்சரிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
-

## படிமுறை 4

- எழுத்துகள் சிலவற்றை விசிறியும் சுழியும் பயன்படுத்தி நான்கு கோடுகளில் எழுத வழிகாட்டுங்கள்.
- **எழுத்தை அறிவோம்** 4 புத்தகத்தில் உள்ள விசிறியும் சுழியும் பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துகளை பார்த்து எழுதும் பயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- ‘ஈ’ ஒலியுடன் கூடிய எழுத்துகளைக் கேட்டு எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- அதற்காக நான்கு கோட்டுப் புத்தகத்தைப் பயன்படுத்துங்கள்.

## படிமுறை 5

- விசிறியும் சுழியும் கொண்டுள்ள எழுத்துகளைக் கொண்டுள்ள சொற்களை நான்கு கோடு களில் எழுதிக் காட்டுங்கள்.
- சொற்களை நான்கு கோடுகளில் எழுதும் பயிற்சிகளில் ஈடுபடுத்துங்கள்.
- அதன்போது எழுத்துகளுக்கிடையில் ஏற்ற இடைவெளி விட்டு எழுதுவதற்கு வழிப் படுத்துங்கள்.
- பார்த்து எழுதிய சொற்களை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- விசிறியும் சுழியும் உள்ள எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கேட்டு எழுதுவதற்கு வழங்குங்கள்.
- இதற்காக நான்கு கோட்டுக் கொப்பியைப் பயன்படுத்துங்கள்.

### படிமுறை 6

- விசிறியும் சுழியும் உள்ள சொற்களை ஒற்றை றூளில் எழுதிக் காட்டுங்கள்.
- இவ் எழுத்துகளை உச்சரிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தெரிவு செய்யப்பட்ட எழுத்துகள் சிலவற்றிற்கு விசிறியும் சுழியும் உள்ள அட்டைகளை இட்டு இந்த எழுத்துக்களை ஒலிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 7

- விசிறியும் சுழியும் உள்ள சொற்களை ஒற்றை றூளில் எழுதுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- **எழுத்தை அறிவோம் 4** புத்தகத்தில் உள்ள விசிறியும் சுழியும் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை ஒற்றை றூளில் எழுதும் பயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- பின்வரும் சொற்களை வாசிப்பதற்கும் பார்த்து எழுதுவதற்கும் மாணவர்களை ஈடுபடுத் துங்கள்.
- உதாரணம் : கீரி, சீனி, வீதி, தீனி, பீதி

- இந்த எழுத்துகளை எழுதும் போது விசிறியும் சுழியும் சரியாகப் பயன்படுத்துவதற்கும் எழுத்துகளுக்கிடையில் ஏற்ற இடைவெளி விடவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- விசிறியும் சுழியும் உள்ள இரு எழுத்துகளைக் கொண்ட சொற்களை கேட்டு எழுதுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உதாரணம் : , மீதி, நீர், நீதி,மீன்

### படிமுறை 8

- பின்வரும் சொற்களை வாசிப்பதற்கும் பார்த்து எழுதுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உதாரணம் : வீதி, மீதம், கீரி , பன்னீர் , வீடு
- இந்த எழுத்துகளை எழுதும் போது விசிறியும் சுழியும் சரியாகப் பயன்படுத்துவதற்கும் எழுத்துகளுக்கிடையில் ஏற்ற இடைவெளி விடவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- விசிறியும் சுழியும் உள்ள மூன்று எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கேட்டு எழுதுவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உதாரணம் : சீப்பு, தீபம், நீலம், சீடர், தீர்வு

### படிமுறை 9

- விசிறியும் சுழியும் உள்ள இரண்டு, மூன்று எழுத்துகளைக் கொண்ட சொற்கள் இரண்டு வீதம் கட்டியெழுப்புவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இதற்காக ஆக்கப்பூர்வமானதும் மகிழ்ச்சிகரமானதுமான செயற்பாடுகளைத் தயார் செய்து கொள்ளுங்கள்.

வாசிப்புப் புத்தகத்திலுள்ள பாடங்களிலுள்ள விசிறியும் சுழியும் உள்ள எழுத்துகளைக் கொண்ட சொற்களைக் கண்டறிந்து வாசிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| செயலடைவுத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 21.1 விதந்துரைக்கப் பட்ட உயிர் மெய் எழுத்-துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) 31 (விசிறி-16 ,விசிறியும் சுழியும்-15) உள்ள எழுத்-துகள் ஒவ்வொ-ன்று வீதம் நான்கு கோட்டுக் புத்தகத்தில் எழுதுவார். | 21.1.1 உரிய உறுப்பு களுடன் இருத்தல் | விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) 31 - 22 இற்கும் இடையிலான எழுத்துகளை உறுப்மைய எழுதுவார். | விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) 21 - 13 இற்கும் இடையிலான எழுத்து களை உறுப்மைய எழுதுவார். | விதந்துரைக்கப் பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) 12இற்கும் 9இற்கும் இடை-ப்பட்ட எழுத்துகளை உறுப்மைய எழுதுவார். | விதந்துரைக்கப் பட்ட உயிர் மெய் எழுத்-துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) கொண்ட 8இற்கும் குறைவான எழுத்துகளை உறுப்மைய எழுதுவார். |
| | 21.1.2 சரியான அமைப் புடன் இருத்-தல் | விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி,விசிறி யும் சுழியும்) 31 - 22இற்கும் இடையிலான எழுத்துகளை அமைப்புடன் எழுதுவார். | விதந்து ரைக்கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) 21 - 13 இற்கும் இடையிலான எழுத்து களை அமைப்புடன் எழுதுவார். | விதந்துரைக்கப் பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசி-றியும் சுழியும்) 12இற்கும் 9 இற்கும் இடைப்பட்ட எழுத்துகளை அமைப்புடன் எழுதுவார். | விதந்துரைக்கப் பட்டஉயிர் மெய் எழுத்துகள் (விசிறி,விசிறி யும் சுழியும்) 8இற்கும் குறைவான எழுத்து களை அமைப்புடன் எழுதுவார். |
| | 21.1.3 உரிய அளவுடன் இருத்தல் | விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) | விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) | விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) | விதந்துரைக் கப்பட்ட உயிர் மெய் எழுத்துகள் (விசிறி, விசிறியும் சுழியும்) |

| செயலடைவுத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 24.1 எழுத்து வழக்கில் எழு-தப்பட்ட 30 சொற்களைக் கொண்ட இலகுவான பந்தி ஒன்றை சரியான உச்சரிப்புடனும் உணர்வு வெளிப் பாட்டுடனும் ஏற்றவேகத் துடனும் உரத்து வாசிப்பார். | 24.1.1 சரியாக இருத்தல் | 30 - 25 எண்ணிக் கைக்கு இடைப்பட்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 24 - 20 எண்ணிக் கைக்கு இடைப்பட்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 19 - 10 எண்ணிக் கைக்கு இடைப்பட்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 9 இற்குக் குறைவான எண்ணிக்கை யிலான சொற்களைச் சரியாக உச்சரிப்பார். |
| | 24.1.1 ஏற்ற வேகம் | சரியான வேகத்தை முறையாக அனுசரித்து வாசிப்பார். | | சரியான வேகத்தை முறையாக அனுசரித்து வாசிக்கமாட்டார். | |
| | 24.1.3 விதந்துரைக் கப்பட்ட நிறுத்தக் குறிகளை அனுசரித்தல் | நிறுத்தக் குறிகளை அனுசரிப்பார். | | நிறுத்தக் குறிகளை அனுசரிக்க மாட்டார். | |
| 24.2 எழுத்து வழக்கில் எழுதப்பட்ட 30 சொற்களைக் கொண்ட இலகுவான | 24.2.1 சரியாக இருத்தல் | 30 - 25 எண்ணிக் கைக்கு இடைப்பட்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 24 - 20 எண்ணிக் கைக்கு இடைப்பட்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 19 - 10 எண்ணிக் கைக்கு இடைப்பட்ட சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 9 இற்குக் குறைவான எண்ணிக்கை யிலான சொற்களைச் சரியாக உச்சரிப்பார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பந்தி ஒன்றை சரியான உச்சரிப்புடனும் உணர்வு வெளிப் பாட்டுடனும் ஏற்றவேகத் துடனும் உரத்து வாசிப்பார். | 24.2.2 உணர்வு பூர்வமான தாயிருத்தல் | கதையின் கருத்துக்கு ஏற்றவாறு மிகச் சிறப்பாக உணர்வுகளை வெளிப் படுத்துவார். | | கதையின் கருத்துக்கு ஏற்றவாறு மிகச் சிறப்பாக உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டார். | |
| | 24.2.3 தொனி வேறுபாடு | மிகச் சிறப்பாக தொனி வேறுபாடுகளைக் காட்டுவார். | | தொனி வேறுபாடுகளைக் காட்டமாட்டடார். | |
| | 24.2.4 ஏற்ற வேகம் | சரியான வேகத்தை முறையாக அனுசரித்து வாசிப்பார். | | சரியான வேகத்தை முறையாக அனுசரித்து வாசிக்கமாட்டார். | |
| | 24.2.5 விதந்துரைக் கப்பட்ட நிறுத்தக் குறிகளை அனுசரித்தல் | நிறுத்தக் குறிகளை அனுசரிப்பார். | | நிறுத்தக் குறிகளை அனுசரிக்க மாட்டார். | |
| 24.3 எழுத்து வழக்கில் அமைந்த சிறிய எட்டு சொற்றொடர் கள் கொண்ட இலகுவான உரையாடல் ஒன்றினை சரியான உச்சரிப்புடனும் உணர்வு பூர்வமாகவும் ஏற்ற வேகத் துடனும் உரத்து வாசிப்பார். | 24.3.1 சரியான தாயிருத்தல் | ஓரிரு சொற்களைத் தவிர தவிர ஏனைய எல்லா சொற் களையும் சரியாக உச்சரிப்பார். | மூன்று அல்லது நான்கு சொற் களைத் தவிர ஏனைய எல்லா சொற் களையும் சரியாக உச்சரிப்பார். | அரைவாசிக்கு மேற்பட்ட எண்ணிக்கை யிலான சொற் களைச் சரியாக உச்சரிப்பார். | அரைவாசிக்கு குறைவான எண்ணிக் கையிலான சொற்களை சரியாக உச்சரிப்பார். |

| | | | |
|---|---|---|---|
| | 24.3.2<br>உணர்வு பூர்வமான தாயிருத்தல் | கருத்துக்கு ஏற்றவாறு மிகச் சிறப்பாக உணர்வுகளை வெளிப்படுத்துவார். | கருத்துக்கு ஏற்றவாறு மிகச் சிறப்பாக உணர்வுகளை வெளிப்படுத்தமாட்டார். |
| | 24.3.3<br>தொனி வேறுபாடு | மிகச் சிறப்பாக தொனி வேறுபாடுகளைக் காட்டுவார். | தொனி வேறுபாடுகளைக் காட்டமாட்டடார். |
| | 24.3.4<br>ஏற்ற வேகம் | சரியான வேகத்தை முறையாக அனுசரித்து வாசிப்பார். | சரியான வேகத்தை முறையாக அனுசரித்து வாசிக்கமாட்டார். |
| | 24.3.5<br>விதந்துரைக் கப்பட்ட நிறுத்தக் குறிகளை அனுசரித்தல் | நிறுத்தக் குறிகளை அனுசரிப்பார். | நிறுத்தக் குறிகளை அனுசரிக்க மாட்டார். |

மொழியை சிறப்பாக அறிந்திருப்பதன் ஊடாக எமது நடைமுறை வாழ்வில் பெற்றுக் கொள்ளக் கூடிய பயன்கள் பலவாகும். அவ்வாறே மொழியின் ஊடாகப் பயன்களைப் பெற்றுக் கொள்ள நிகழக்கூடிய சந்தர்ப்பங்களும் பலவாகும். **“புத்தகங்களை வாசித்தல்”** என்பது இவற்றுள் ஒரு செயற்பாடாகும். எமக்கு முறையாக புத்தகங்களை வாசிக்க இயலுமாயின் புத்தகங்களை வாசிப்பதால் கிடைக்கக் கூடிய பயன்கள் வரையறையற்றவையாகும்.

முதலாவதாக புத்தகங்களை வாசிப்பதற்கு மாணவர்களிடையே ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். முதலாம் தரத்திலிருந்தே இந்நிலைமையை ஏற்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

எழுத்துகளை முறையாக இனங்கண்டு கொள்வதற்கும் சரியாக எழுத்துகளை வாசிப் பதற்குமான ஆற்றல் புத்தகங்களை வாசிப்பதற்குரிய முக்கியமானதொரு காரணியாகும். இதற்கிணங்க புத்தகங்களை வாசிப்பதில் மாணவர்களை ஈடுபடச் செய்வதற்கும் இதன் பலாபலன்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்குமான நடவடிக்கைகளை மேற் கொள்வது அவசியமானதாகும்.

**பாடவிடய உள்ளடக்கம்**

**புத்தகங்களை வாசித்தல்**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்று கைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| **ALF** | 25. புத்தக மொன்றை வாசிக்கும் போது கருத்திற் கொள்ள வேண்டிய அடிப்படை விடயங்களில் விளக்கத்தை வெளிப் படுத்தும் வகையில் புத்தகங்களை வாசிப்பார். | பல்வகைத் கருப்பொருள் களுக்கு உரித்தான கதைப் புத்தகங்கள்<br>▪ புத்தகத் தலைப்பு<br>▪ அட்டைப்பட சித்திரம்<br>▪ நூலாசிரியர்<br>▪ அவதானிப்பு-க்கள்<br>▪ உரத்து வாசித்தல்<br>▪ சரியான உச்சரிப்பு<br>▪ தொனி<br>▪ வேறுபாடு<br>▪ ஏற்ற வேகம்<br>▪ அவதானம்<br>▪ விளக்கம்<br>▪ தன்னடக்கம் | ▪ வாசித்தல்<br>▪ பேசுதல்<br>▪ செவி மடுத்தல் | 25.1<br>30 சொற்கள் கொண்ட கதைப் புத்தகம் ஒன்றின் அட்டைப் படத்தை அவதானித்து அதன் தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் உரத்து வாசிப்பார். | 25.1.1<br>சரியாக இருத்தல் |
| | | | | 25.2<br>30 சொற்கள் கொண்ட கதைப் புத்தகம் ஒன்றின் அட்டைப் படத்தை அவதானித்து அதன் தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் உரத்து வாசிப்பார். | 24.2.1<br>தலைப் புக்கும் சித்திரத் துக்கும் இடையில் தொடர் புடைய எதிர்வுகூறுலா-கயிருத்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 25.3<br>30 சொற்கள் கொண்ட கதைப் புத்தகத்தை சரியான உச்சரிப் புடனும் தொனி வேறுபாட் டுடனும் ஏற்ற வேகத்துடனும் உரத்து வாசிப்பார். | 25.3.1<br>சரியாக இருத்தல்<br>25.3.2<br>தொனி வேறுபாடு<br>25.3.3<br>ஏற்ற வேகம்<br>25.3.4<br>விதந்துரைக் கப்பட்ட நிறுத்தக் குறியினை அனுசரித்தல் |
| | | | | 25.4<br>30 சொற்கள் கொண்ட கதைப் புத்தகத்தை வாசித்து அதன் உள்ளடக்கம் தொடர்பாக தமது கருத்தை முன்வைப்பார். | 25.4.1<br>விளக்க மானதாக யிருத்தல் |

**செயற்பாடு 25.1, 25.2, 25.3, 25.4** : **புத்தகத்தை வாசிப்போம்.**

**காலம்** : 2 மணித்தியாலங்கள்

**கற்றல் வளங்கள்** : பல்வகைக் கருப்பொருள்களுக்கு உரித்ததான கதைப் புத்தகங்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படிமுறை 01**

- மாணவர்களுக்கு கதைப் புத்தகம் ஒன்றைக் காட்டுங்கள்.
- அட்டைப்படத்தின் சித்திரம் புத்தகத்தின் பெயர் நூலாசிரியரின் பெயர் என்பன தொடர்பாக மாணவர்களது அவதானத்தைத் தூண்டுங்கள்.
- கதைப் புத்தகத்தின் பெயர் நூலாசிரியரின் பெயர் என்பனவற்றை உரத்து வாசியுங்கள்.
- இவ்வாறு மேலும் பல கதைப் புத்தகங்களை மாணவர்களுக்குக் காட்டி அட்டைப்படத்தின் சித்திரம் புத்தகத்தின் பெயர் நூலாசிரியரின் பெயர் என்பன தொடர்பாக மாணவர்களது அவதானத்தைத் தூண்டுங்கள்.
- அதற்கமைய கதைப் புத்தகத்தின் அட்டைப்படத்தில் அப்புத்தகத்துடன் தொடர்புடைய சித்திரம், கதைப்புத்தகத்தின் பெயர், நூலாசிரியரின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதை மாணவர் களுடன் கலந்துரையாடுங்கள்.

**படிமுறை 02**

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- குழுவிற்கு கதைப் புத்தகம் ஒன்று வீதம் வழங்குங்கள்.
- அட்டைப்படத்தை நன்கு அவதானிக்குமாறு மாணவர்களிடம் கூறி அதற்குப் போதுமான கால அவகாசம் வழங்குங்கள்.
- கதைப் புத்தகத்தின் பெயர், நூலாசிரியரின் பெயர் என்பனவற்றை உரத்து வாசிக்க மாணவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படிமுறை 03**

- மாணவர்களை அரைவட்ட வடிவில் அமரச் செய்யுங்கள்.
- மாணவர்களுக்கு கதைப்புத்தகம் ஒன்றினைக் காட்டுங்கள்.
- அப்புத்தகத்தில் உள்ள பெயர், நூலாசிரியரின் பெயர் என்பனவற்றை உரத்து வாசியுங்கள்.
- அப்புத்தகத்தின் அட்டைப்படத்திலுள்ள சித்திரம் தொடர்பாக மாணவர்களின் அவதானத்தைத் தூண்டுங்கள்.
- அப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் வெளிப்படுத்துவதற்கு மாணவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இக்கருத்துக்கள் ஊடாக முன்வைக்கக் கூடிய விடயம் சித்திரத்தில் வெளிப்படுத்தப் படுகிறதா என சிந்திப்பதற்கு மாணவர்களை சிந்தனைக் கிளர்வில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்கிணங்க வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்களை மாணவர்களிடம் வினவி கலந்துரை யாடுங்கள்.

### படிமுறை 04

- மேலே படிமுறை 3 இல் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளுடன் கதைப் புத்தகத்தின் பெயரை தொடர்புபடுத்துவதற்காக மாணவர்களை சிந்தனைக் கிளர்வில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்கிணங்க சித்திரத்தில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளுக்கும் புத்தகத்தின் பெயருக்கும் இடையிலான தொடர்பு பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- இவ்வாறு கதைப்புத்தகத்தின் அட்டைப்படத்தினை நன்றாக அவதானித்து புத்தகத்தின் பெயர் மற்றும் சித்திரத்தின் ஊடாக கதையின் உள்ளடக்கம் பற்றி எதிர்வு கூற முடியும் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- இதற்கிணங்க வேறு கதைப்புத்தகங்கள் சிலவற்றை உதாரணமாகக் கொண்டு அவற்றின் அட்டைப்படங்களிலுள்ள சித்திரங்கள் மற்றும் புத்தகங்களின் பெயர்களுக்குமிடையேயான தொடர்பினூடாக கதையின் உள்ளடக்கம் தொடர்பாக எதிர்வு கூறும் அனுபவங்களில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.

### படிமுறை 05

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- குழுவிற்கு கதைப் புத்தகம் ஒன்று வீதம் வழங்குங்கள்.
- குழுவினருக்கு வழங்கப்பட்ட கதைப்புத்தகத்தின் அட்டைப்படத்தினை நன்றாக அவதானித்து புத்தகத்தின பெயர், சித்திரத்தின் ஊடாக கதையின் உள்ளடக்கம் பற்றி எதிர்வு கூற சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 06

- கதைப்புத்தகம் ஒன்றினைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- கதையினை உரத்து வாசியுங்கள்.
- மாணவர்களுக்கு கதையினை தொனி வேறுபாட்டுடன் கூறுங்கள்.

### படிமுறை 07

- தமது குழுவுக்குக் கிடைத்த கதையினை சரியான உச்சரிப்புடனும் ஏற்ற தொனிவேறு பாட்டுடனும் ஏற்ற வேகத்துடனும் வாசிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- சகல மாணவர்களுக்கும் வாசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 08

- வாசித்த கதையின் ஊடாக அதன் உள்ளடக்கம் தொடர்பான கருத்து ஒன்றினை தமது குழுவினருக்கு முன்வைப்பதற்கு சகல மாணவர்களுக்கும் உதவுங்கள்.
- இது தொடர்பாக மாதிரி ஒன்றினை முதலில் செய்து காட்டுங்கள்.

**கணிப்பீடு**

| செயலடைவுத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். |
|---|---|---|---|
| 25.1<br>30 சொற்கள் கொண்ட கதைப்புத்தகம் ஒன்றின் அட்டைப் படத்தை அவதானித்து அதன் தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் உரத்து வாசிப்பார். | 25.1.1<br>சரியாக இருத்தல் | தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் சரியாகக் குறிப்பிடுவார். | தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் சரியாகக் குறிப்பிட மாட்டார். |
| 25.2<br>30 சொற்கள் கொண்ட கதைப்புத்தகம் ஒன்றின் அட்டைப் படத்தை அவதானித்து அதன் தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் உரத்து வாசிப்பார். | 25.2.1<br>தலைப் புக்கும் சித்திரத் துக்கும் இடையில் தொடர் புடைய எதிர்வு கூறலாகயிரு த்தல் | சித்திரத்துக்கும் தலைப்புக்கும் மிகவும் பொருந்தும் எதிர்வுகூறலை முன்வைப்பார். | சித்திரத்துக்கும் தலைப்புக்கும் பொருந்தும் எதிர்வுகூறலை முன்வைக்கமாட்டார். |

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். | |
|---|---|---|---|---|---|
| | | 4 | 3 | 2 | 1 |
| 25.3<br>30 சொற்கள் கொண்ட கதைப் புத்தகத்தை சரியான உச்சரிப்புடனும் தொனி வேறுபாட்டுடனும் ஏற்ற வேகத்துடனும் உரத்து வாசிப்பார். | 25.3.1<br>சரியாக இருத்தல் | 30- 25 இடைப்பட்ட எண்ணிக் கையிலான சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 24 - 20 இடைப்பட்ட எண்ணிக் கையிலான சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 19 - 10 இடைப்பட்ட எண்ணிக் கையிலான சொற்களைச் சரியாக உச்சரிப்பார். | 9 இற்கும் குறைவான எண்ணிக் கையிலான சொற்களைச் சரியாக உச்சரிப்பார். |
| | 25.3.2<br>தொனி வேறுபாடு | மிகச் சிறப்பாகத் தொனி வேறுபாட்டைக் காட்டுவார். | | தொனி வேறுபாட்டைக் காட்டமாட்டார். | |
| | 25.3.3<br>ஏற்ற வேகம் | உரிய வேகத்தை சிறப்பாகப் பேணி வாசிப்பார். | | உரிய வேகத்தில் வாசிக்க மாட்டார். | |
| | 25.3.4<br>விதந்துரைக் கப்பட்ட நிறுத்தக் குறிகளை அனுசரித்தல் | நிறுத்தக் குறிகளை அனுசரிப்பார். | | நிறுத்தக் குறிகளை அனுசரிக்க மாட்டார். | |
| 25.4<br>30 சொற்கள் கொண்ட கதைப் புத்தகத்தை வாசித்து அதன் உள்ளடக்கம் தொடர்பாக தமது கருத்தை முன்வைப்பார். | 25.4.1<br>விளக்க மானதாக இருத்தல் | மிகத் தெளிவான கருத்துக்களை முன்வைப்பார். | | தெளிவான கருத்துக்களை முன்வைக்கமாட்டார். | |

மொழியைச் சரியாக கிரகித்துக் கொள்ள முடியுமாயின் இலக்கிய ஆக்கங்களை நயப்ப-தற்கு அது விசேட தூண்டுகோலாக அமையும். அவ்வாறே ஒருவருடைய ஆக்கத்திறனுக்கும் மொழியைப் பிரயோகிக்கும் தேர்ச்சியானது மிக முக்கியமானதாகும். இதற்கிணங்க பின்வரும் செயற்பாடுகளில் மிகச் சிறப்பாக ஈடுபடச் செய்வதனூடாக நயக்கும் திறனையும் ஆக்கத் திறனுக்கு அவசியமான அடிப்படையையும் வழங்கக் கூடியதாக இருக்கும்.

**பாடவிடய உள்ளடக்கம்**

## இலகுவான சிறுவர் பாடல்கள்

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்று கைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
| --- | --- | --- | --- | --- | --- |
| **ALF** | 26.<br>இலகுவான சிறுவர் பாடல்களை தாளத்துடன் பாடுவார். | **“எமது வீடு”** என்ற கருப் பொருளில் எழுதப்பட்ட பாடல்கள் இரண்டும் இலகுவான பாடலொன்றும்<br>▪ இலகுவான சொற்கள்<br>▪ பாடல் வரிகள்<br>▪ தாளம்/லயம்<br>▪ சேர்ந்து பாடுதல் பாடல்<br>▪ சரியான உச்சரிப்பு<br>▪ தாளம் இடல்<br>▪ அவதானம்<br>▪ தன்னடக்கம்<br>▪ கொண்ணிலை<br>▪ உடல் அசைவுகள் | ▪ வாசித்தல்<br>▪ பேசுதல்<br>▪ செவி மடுத்தல் | 26.1<br>இலகுவான சிறுவர் பாடல்கள் இரண்டினை உரிய தாளத்துடன் சேர்ந்து பாடுவார். | 26.1.1<br>சரியான உச்சரிப்பு<br>26.1.2<br>சரியாக தாளம் இடல் |
| | | | | 26.2<br>இலகுவான சிறுவர் பாடலொன் றினை உரிய தாளத்துடன் சேர்ந்து பாடுவார். | 26.2.1<br>சரியான உச்சரிப்பு<br>26.1.2<br>சரியாக தாளம் இடல் |

செயற்பாடு 26.1, 26.2 : பாடல்கள் தாளத்துடன் பாடுவோம்.

காலம் : 2 மணித்தியாலங்கள்

கற்றல் வளங்கள் : பாடல்கள்

கற்றல் கற்பித்தல் செயன்முறை :

படிமுறை 1

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- பின்வரும் சிறுவர் பாடல்கள் இரண்டினை மாணவர்கள் பலமுறை செவிமடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இந்த பாடல்களின் உள்ளடக்கங்களை இலகுவாக மாணவர்களுக்கு விளக்குங்கள்.

**எங்கள் பாடசாலை**

**பாலர் நாங்கள் படித்திடும்**
**பாடசாலை பாருங்கள்.**
**பாலர் நாமும் படித்திட**
**பாடசாலை வாருங்கள்**

**பாலர் நாங்கள் கூடுவோம்**
**பரந்த வெளியில் ஆடுவோம்**
**பாலர் சுத்தம் பேணுவோம்**
**பலரும் புகழ வாழுவோம்**

**குப்பை கூளம் கூட்டியே**
**குறித்த குழியில் கொட்டுவோம்**
**எப்பொழுதும் சுத்தமாய்**
**இருக்க நாங்கள் பழகுவோம்**

த. துரைசிங்கம்

நன்றி : ஈழத்துச் சிறுவர் பாடல் களஞ்சியம்

படிமுறை 02

- இந்த கவிதைகள் இரண்டிற்கும் தாளம் போடும் விதத்தினை செய்து காட்டுங்கள்.
- மாணவர்களுடன் பாடல்கள் இரண்டிற்கும் தாளம் போட்டு பல தடவைகள் பாடிக் காட்டுங்கள்.
- இதன் பின்னர் இப்பாடல்கள் இரண்டினையும் தாளம் போட்டு குழுவாக சேர்ந்து பாடுவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்குங்கள்.

## படிமுறை 03

- பின்வரும் பாடலை மாணவர்கள் பலமுறை செவிமடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இந்த பாடலின் கருத்தை இலகுவாக மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- இயற்கையின் அழகு பற்றியும் இதனை அனுபவிப்பதனால் உள்ளத்தில் ஏற்படும் மகிழ்ச்சி மற்றும் ஆறுதல் பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- இந்த சந்தர்ப்பங்கள் பற்றி மாணவர்களது அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்குங்கள்.

**இயற்கை அன்னை**

பச்சை நிறக் காடுகளே
பறந்து வரும் பறவைகளே
வண்ண வண்ணப் பூக்களே
வாசம் வீசும் சோலைகளே

நீல நிற வானமே
நீந்திச் செல்லும் மேகமே
கொட்டும் வெள்ளை அருவியே
குதித்து ஓடும் ஆறுகளே

அழகு மிக்க பூமி இது
அன்பு காட்டும் இயற்கை இது
பாடிப் பாடி மகிழ்வோமே!
பார்த்துப் பார்த்து இரசிப்போமே!

## படிமுறை 04

- இந்த பாடலுக்கு தாளம் போடும் விதத்தினை செய்து காட்டுங்கள்.
- மாணவர்களுடன் பாடலுக்கு தாளம் போட்டு பல தடவைகள் பாடிக் காட்டுங்கள்.
- இப்பாடலுக்கு தாளம் போட்டுக் குழுவாகச் சேர்ந்து பாடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். |
|---|---|---|---|
| 26.1 இலகுவான சிறுவர் பாடல்கள் இரண்டினை உரிய தாளத்துடன் சேர்ந்து பாடுவார். | 26.1.1 உச்சரிப்பு சரியான தாகயிருத்-தல் | தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் சரியாகக் குறிப்பிடுவார். | தலைப்பையும் நூலாசிரியரின் பெயரையும் சரியாகக் குறிப்பிட மாட்டார். |
| | 26.1.2 தாளம் இடல் சரியான தாகயிருத்-தல் | சரியாக தாளம் போடுவார். | சரியாக தாளம் போடமாட்டார். |
| 26.2 இலகுவான சிறுவர் பாட லொன்றினை உரிய தாளத்துடன் சேர்ந்து பாடுவார். | 26.2.1 உச்சரிப்பு சரியான தாகயி ருத்தல் | சகல சொற்களையும் சரியாக உச்சரிப்பார். | சகல சொற்களையும் சரியாக உச்சரிக்க மாட்டார். |
| | 26.1.2 தாளம் இடல் சரியானதாக யிருத்தல் | சரியாக தாளம் போடுவார். | சரியாகதாளம் போடமாட்டார். |

**பாடவிடய உள்ளடக்கம்**

**சிறுவர் பாடல்கள்**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| **ALF** | 27 செவிமடுத்து இரசித்த கதை யொன்றினை ஞாபகத்தில் கூறுவார். | **"எமது வீடு"** என்ற கருப் பொருளில் எழுதப்பட்ட 3 பாத்திரங்களைக் கொண்டதும் 30 சொற்களுக்கு உட்பட்டதுமான கதை<br>▪ பாத்திரங்கள்<br>▪ சம்பவம்<br>▪ சம்பவங் களுக் கிடையலான இடைதொடர்பு<br>▪ தொட ரொழுங்கு<br>▪ எழுத்து வழக்கு<br>▪ விளக்கம்<br>▪ தன்னடக்கம்<br>▪ நினைவில் கொண்டுவரல்<br>▪ சரியான உச்சரிப்பு<br>▪ தொனி வேறுபாடு<br>▪ உணர்வு வெளிப்பாடு<br>▪ உடல் அசைவுகள் | ▪ வாசித்தல்<br>▪ பேசுதல்<br>▪ செவி மடுத்தல் | 27.1 செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள பாத்திரங்கள் இரண்டினைப் பெயரிடுவார். | 27.1.1 சரியாக இருத்தல் |
| | | | | 27.2 செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள சம்பவங்கள் இரண்டினைப் பெயரிடுவார். | 27.2.1 சரியாக இருத்தல் |

**செயற்பாடு 27.1, 27.2, 27.3 : கதையொன்றினை நினைவுபடுத்திக் கூறுவோம்.**

**காலம்** : 1 மணித்தியாலம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை :**

**படிமுறை 01**

- பின்வரும் கதையைக் கூறி மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.

**நாங்கள் நல்ல நண்பர்கள்**

ஒரு காட்டிலே யானைக்குட்டியும் முயல் குட்டியும் நல்ல நண்பர்களாக இருந்தனர். இவர்கள் இருவரும் மிகவும் ஒற்றுமையாக விளையாடுவர். ஒருவரின்றி மற்றொருவரால் இருக்க முடியாது. ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் இவர்கள் இருவரும் விளையாடுவதற்காக கிராமத்திலுள்ள மைதானத்துக்குச் செல்வார்கள். சில வேளைகளில் தவிர்க்க இயலாமல் யாராவது ஒருவர் உரிய நேரத்தில் விளையாடுவதற்கு வராது விட்டால் மற்றவர் பொறுமையற்று காணப்படுவார்.

ஒவ்வொரு நாளும் காலை வேளையில் முயல்குட்டி பாடசாலைக்குச் செல்வார். முயல் குட்டியை பாடசாலைக்கு யானைக் குட்டியே கூட்டிச் செல்வார். முயல் குட்டி யானைக் குட்டியின் முதுகில் ஏறி மிகவும் சந்தோஷத்துடன் பாடசாலைக்குச் செல்வார். முயல் குட்டி பாடசாலையின் வாயிலுக்கு அருகில் இறங்கிச் செல்லும்போது யானைக்குட்டிக்கு கவலை வந்து விடும். கவலையின் காரணமாக சிலவேளைகளில் யானைக்குட்டி ஓரமாகச் சென்று அழுவதும் உண்டு. ஒருநாள் முயல் குட்டி யானைக்குட்டியின் கண்களில் கண்ணீரைக் கண்டார். “ஏன் நண்பனே உனக்கு நானில்லாமல் கவலையாக இருக்கிறதா? அதனால்தான் அழுகிறாயா? ” என முயல்குட்டி கேட்டது.

"எனக்கு மிகவும் கவலையாக உள்ளது .முயல் குட்டியே. எனக்கும் உன்னைப் போல பாடசாலைக்குச் செல்ல ஆசையாக உள்ளது”.யானைக் குட்டி கூறியது. ”சரி எனக்கும் நீ எனது வகுப்பிலேயே இருக்க வேண்டும் என்றுதான் ஆசை. நான் எனது ஆசிரியையிடம் கேட்கிறேன்." என்று முயல் குட்டி கூறியது அன்று முயல் குட்டி பாடசாலைக்குச் சென்று இந்த விடயத்தை ஆசிரியையிடம் கூறியது. ”நாளையிலிருந்து உனது நண்பனுக்கும் பாடசாலைக்குச் வரச் சொல்” என்று ஆசிரியை கூறினார்.

முயல் குட்டி பாடசாலை முடியும் வரை இந்த விடயத்தை யானைக்குட்டியிடம் சொல்வதற்காக பொறுமையின்றி இருந்தது. பாடசாலை முடிவுற்றதும் வீட்டுக்குச் சென்று விளையாட்டு நேரம் வரும் வரை காத்திருக்காமல் மைதானத்துக்குச் சென்றது. அன்று நேரம் போனதே முயல் குட்டி க்குத் தெரியவில்லை. அப்போது யானைக் குட்டி வந்தது. முயல் குட்டி யானைக் குட்டியிடம் செய்தியைச் கூறியது. யானைக் குட்டிக்குச் சரியான மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியுடனேயே இருவரும் நீண்ட நேரம் விளையாடினர். அடுத்த நாள் தொடக்கம் யானைக் குட்டியும் முயல் குட்டியும் பாடசாலைக்கு சேர்ந்தே சென்றனர். சேர்ந்தே வந்தனர்.

**படிமுறை 02**

- கதையின் உள்ளடக்கத்தை இலகுவாக மாணவர்களுக்கு விளக்கி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- இதன் போது மாணவர்களுடைய கருத்துகளுக்கு முதலிடம் வழங்குங்கள்.
- எமது அயலில் உள்ளவர்கள் பற்றியும் அவர்களது உணர்வுகள் பற்றியும் விளங்கிக் கொள்வதோடு அவர்களது தேவைகள் பற்றி விளங்கிச் செயற்படுவதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- அதற்கமைய இவை போன்ற நற்பண்புகளை எமது வாழ்வில் வளர்த்துக் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டுங்கள்.

படிமுறை 03

- செவிமடுத்த கதையிலே உள்ள பாத்திரங்கள் இரண்டினைக் கூற எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படிமுறை 04

- செவிமடுத்த கதையிலே இடம்பெற்ற சம்பவங்கள் இரண்டினைக் கூற எல்லா மாணவர்க ளுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படிமுறை 05

- செவிமடுத்த சிறுவர் கதையை அதில் வரும் சம்பவங்களுக்கும் பாத்திரங்களுக்கும் இடையே தொடர்புடையதாக நினைவுபடுத்தி கூறுவதற்கு சகல மாணவர்களுக்கும் சந்-தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். |
|---|---|---|---|
| 27.1 செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள பாத்திரங்கள் இரண்டினைக் கூறுவார். | 27.1.1 சரியாக இருத்தல் | பாத்திரங்கள் இரண்டினையும் சரியாகக் கூறுவார். | பாத்திரங்கள் இரண்டினையும் சரியாகக் கூற மாட்டார். |
| 27.2 செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள சம்பவங்கள் இரண்டினைக் கூறுவார். | 27.2.1 சரியாக இருத்தல் | சம்பவங்கள் இரண்டினை சரியாகக் கூறுவார். | சம்பவங்கள் இரண்டினை சரியாகக் கூற மாட்டார். |

| | | | |
|---|---|---|---|
| 27.3 செவிமடுத்த சிறுவர் கதையை பாத்திரங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையிலான தொடர்புடன் நினைவில் கொண்டு வந்து மீளக் கூறுவார். | 27.3.1 பாத்திரங்களுக் கும் சம்பவங் களுக்கும் இடையில் தொடர்புடைய தாகயிருத்தல் | பாத்திரங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையிலான தொடர்பை மிகச் சிறப்பாகப் பேணுவார். | பாத்திரங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையிலான தொடர்பைப் பேணமாட்டார். |
| | 27.3.2 தொனி வேறுபாடு | மிகச் சிறப்பாக தொனி வேறுபாட்டைக் காட்டுவார். | தொனி வேறுபாட்டைக் காட்டமாட்டார். |
| | 27.3.3 உணர்வு வெளிப்பாடு | கதையின் கருத்துக்கு அமைய மிக நன்றாக உணர்வை வெளிப் படுத்துவார். | கதையின் கருத்துக்கு அமைய உணர்வை வெளிப்படுத்தமாட்டார். |

**பாடவிடய உள்ளடக்கம்**

**சிறுவர் கதைகளும் சித்திரங்களும்**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| ALF | 28<br>சிறுவர் கதை யொன்றின உள்ளடக் கத்தை அடிப் படையாகக் கொண்டு சித்திரத்தை வரைந்து முன்வப்பார். | **“எம்மைச் சூழவுள்ள பிராணிகள்"** என்ற கருப் பொருளில் 30 சொற்களுக்கு உட்பட்டதாக எழுதப்பட்ட கதை<br>▪ உன்னிப்பாக செவிமடுத்தல்<br>▪ கதையில் உள்ளடக்கப் பட்டுள்ள சம்ப வங்களும் பாத்திங்களும் | ▪ செவி மடுத்தல்<br>▪ பேசுதல் | 28.1<br>செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள பாத்திரங்கள் இரண்டினைப் பெயரிடுவார். | 28.1.1<br>சரியாக இருத்தல் |
| | | ▪ விளக்கம்<br>▪ கருத்து வெளிப்பாடு<br>▪ தன்னடக்கம்<br>▪ மெய்ப்பாடு | | 28.2<br>செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள சம்பவங்கள் இரண்டினைப் பெயரிடுவார். | 28.2.1<br>சரியானதாக இருத்தல் |
| | | | | 28.3<br>செவிமடுத்த சிறுவர் கதையில் வரும் சம்பவங் களுள் ஒரு சம்பவத்தை சித்திரமாக வரைவார். | 28.3.1<br>சித்திரத்தின் ஊடாக சம்பவம் சித்திரிக் கப்படல் |

செயற்பாடு 28.1, 28.2, 28.3 : **கதையின் ஊடாகச் சித்திரம் வரைவோம்.**

**காலம்** : 1 மணித்தியாலம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படிமுறை 1**

- பின்வரும் கதையை மாணவர்கள் பல தடவைகள் செவிமடுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

**இரவு விழா**

கறையான்கள் மிகவும் சுறுசுறுப்பானவை. ஏதாவது வேலையில் ஈடுபடாமல் இருப்பதைக் காணமுடியாது. எப்பொழுதும் சிறிய மண் துகள்களை எடுத்து வீட்டைக் கட்டுவதைக் காணலாம். இந்த வீட்டைக் கட்டுவது ஒருவர் மாத்திரம் இருப்பதற்கல்ல. எல்லோரும் இருப்பதற்காகவே கட்டுகின்றன. மழைக்காலம் நெருங்கிவிட்டமையை அறிந்ததனாலேயே எல்லோரும் ஒன்றுகூடி ஓய்வின்றி இந்த வீட்டைக் கட்டுகின்றன. மிக விரைவாக வீட்டைக் கட்டி முடிக்க வேண்டியிருந்த தனால் கறையான்களின் தலைவர் கூட்டமொன்றைக் கூட்டினார். வீட்டைக்கட்டும் பணிகளைப் பகிர்ந்து செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

மண்ணைச் சேகரிக்கவும் சுவர்களைக் கட்டியெழுப்பவும் ஜன்னல் கதவுகளை அமைக்கவும் வேலைகளைப் பகிர்ந்து கொண்டன. பெண் கறையானகள் ஜன்னல், கதவு போன்றவற்றிற்கு திரைச்சீலைகளை இட்டு வீட்டின் உட்புறத்தை அலங்கரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டன. எப்படியாயினும் மழைக்காலத்தற்கு முன்னரே வீட்டைக்கட்டி நிறைவு செய்து விட்டன. வீட்டில் பெரிய விழா ஒன்றைக் கொண்டாடக் கறையான்களின் தலைவர் தீர்மானித்தார். அதற்கான நாளொன்றைக் குறித்துக் கொண்டார். எறும்புகளுக்கும் வெட்டுக்கிளிகளுக்கும் மின்மினி பூச்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார். இந்த விழா இரவு நேரத்திலேயே இடம்பெற்றது. எறும்புகளும் வெட்டுக்கிளிகளும் பலவகையான உணவுப்பண்டங்களை எடுத்துக் கொண்டு விழாவுக்கு வந்தன. மின்மினி பூச்சிகள் விழாவுக்கு வந்து இலவசமாக ஒளியை வழங்கின. அன்று கறையான்களின் வீட்டின் உட்புறம் தேவலோகம் போல காட்சியளித்தது. எல்லோரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

- கதையின் உள்ளடக்கத்தை இலகுவாக மாணவர்களுக்கு விளக்கி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- இதன் போது மாணவர்களுடைய கருத்துகளுக்கு முதலிடம் வழங்குங்கள்.
- நாம் வாழும் போது சில கால கட்டங்களில் எதிர்பாராத சந்தர்ப்பங்களுக்கு முகங் கொடுக்க வேண்டி வரும் என்பதையும் இதன்போது புத்திசாதுரியத்துடன் சிந்தித்து அத்தகைய சம்பவங்களுக்கு முகங்கொடுக்க வேண்டும் என்பதையும் வாழ்வின் பல்வேறு செயற்பாடுக-ளின் போதும் திட்டமிட்டு செயற்பட வேண்டும் என்பதையும் ஒன்றிணைந்து செயலாற்று வதன் முக்கியத்துவம் பற்றியும் தலைவரொருவரின் பொருத்தமான கருத்துகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதையும் கதையினூடாகக் கலந்துரையாடுங்கள்.
- அதற்கமைய இத்தகைய அனுபவத்தின ஊடாக வாழ்க்கையில் வெற்றிபெறக் கூடிய விதத்-தினையும் இதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுங்கள்.
- இது தொடர்பாக மாணவர்களது கருத்துகளுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 02

- கதையிலே உள்ள பாத்திரங்கள் இரண்டினைக் கூற அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 03

- செவிமடுத்த கதையிலே இடம்பெற்ற சம்பவங்கள் இரண்டினைக் கூற அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 04

- செவிமடுத்த கதையிலுள்ள ஒரு சம்பவத்தை சித்திரமாக வரைய சகல மாணவர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்குங்கள்.

### படிமுறை 05

- வரைந்த சித்திரத்துக்குப் பொருத்தமாக வர்ணம் தீட்டி முன்வைப்பதற்கு சகல மாணவர் களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வரைந்த சித்திரத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். |
|---|---|---|---|
| 28.1<br>செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள பாத்திரங்கள் இரண்டினைக் கூறுவார். | 28.1.1<br>சரியாக இருத்தல் | பாத்திரங்கள் இரண்டினையும் சரியாகக் கூறுவார். | பாத்திரங்கள் இரண்டினையும் சரியாகக் கூற மாட்டார். |
| 28.2<br>செவிமடுத்த சிறுவர் கதையிலுள்ள சம்பவங்கள் இரண்டினைக் கூறுவார். | 28.2.1<br>சரியாக இருத்தல் | சம்பவங்கள் இரண்டினை சரியாகக் கூறுவார். | சம்பவங்கள் இரண்டினை சரியாகக் கூறமாட்டார். |
| 28.3<br>செவிமடுத்த சிறுவர் கதையில் வரும் சமபவங்களுள் ஒரு சம்பவத்தை சித்திரமாக வரைவார். | 28.3.1<br>சித்திரத்தின் ஊடாக சம்பவம் சித்திரிக்கப் படல் | சம்பவம் சித்திரிக்கப் படும் வகையில் சித்திரத்தை வரைவார். | சம்பவம் சித்திரிக் கப்படும் வகையில் சித்திரத்தை வரைய மாட்டார். |

**பாடவிடய உள்ளடக்கம்**

**சிறுவர் பாடல்களும் சித்திரங்களும்**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்று கைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| ALF | 29<br>சிறுவர் பாடலொன்றின் உள்ளடக் கத்தை அடிப் படையாகக் கொண்டு சித்திரத்தை வரைந்து முன்வைப்பார். | **"நிலமும் வானமும் "**என்ற கருப்பொருளின் கீழ் எழுதப்பட்ட இலகுவான சிறுவர் பாடல்<br>▪ உன்னிப்பாகச் செவிமடுத்தல்<br>▪ பாடலில்<br>▪ உள்ளடக்கப் பட்டுள்ள கருத்துக்கள்<br>▪ விளக்கம்<br>▪ கருத்து வெளிப்பாடு<br>▪ தன்னடக்கம்<br>▪ மெய்ப்பாடு<br>▪ வர்ணப் பயன்பாடு | ▪ செவி மடுத்தல்<br>▪ பேசுதல் | 29.1<br>செவிமடுத்த சிறுவர் பாடலிலுள்ள சம்பவங்கள் இரண்டினைப் பெயரிடுவார். | 29.1.1<br>சரியாக இருத்தல் |
| | | | | 29.2<br>செவிமடுத்த சிறுவர் பாடலில் வரும் சம்பவங் களுள் ஒரு சம்பவத்தை சித்திரமாக வரைவார். | 29.2.1<br>சித்திரத்தின் ஊடாக சம்பவம் சித்திரிக்கப் படல் |

| | | |
|---|---|---|
| செயற்பாடு 29.1, 29.2 | : | சிறுவர் பாடலின் ஊடாகச் சித்திரம் வரைவோம். |
| காலம் | : | 1 மணித்தியாலம் |
| கற்றல் வளங்கள் | : | பாடல் |
| கற்றல் கற்பித்தல் செயன்முறை | : | |

## படிமுறை 01

- பின்வரும் பாடலை மாணவர்கள் சில தடவைகள் செவிமடுக்கச் செய்யுங்கள்.

### இரவு நேரத்து அழகு

**நீல வானப் பந்தலிலே**
**நித்திரை கொள்ளும் நேரமிது!**
**வெள்ளி நிலா வானத்திலே**
**மெல்ல மெல்ல வருகுது!**

**பளபளக்கும் விண்மீன்கள்**
**பார்வை தந்து சிரிக்குது!**
**குளுகுளுவெனத் தென்றல் காற்று**
**கூவி நம்மை அழைக்குது!**

**தூங்கும் பூக்கள் இதழ்மூடி**
**துயில்கொள்ளும் நேரமிது!**
**அமைதி எங்கும் நிறைந்திருக்க**
**அழகிய இரவு வந்திடுமே!**

- மாணவர்களுக்கு பாடலின் உள்ளடக்கத்தை இலகுவான முறையில் விளக்கி கலந்துரை யாடுங்கள்.
- இரவுக் காட்சியினது கண்கவர் தன்மையை உள்ளத்தைக் கவரும் வகையில் எடுத்துக் கூறுங்கள்
- இத்தகைய அனுபவங்களைப் பெறுவதன் முக்கியத்துத்தைக் கலந்துரையாடுங்கள்.
- இத்தகைய சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாணவர்களது அனுபவங்களைக் கூறுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## படிமுறை 02

- செவிமடுத்த சிறுவர் பாடலில் இடம்பெற்ற சம்பவங்கள் இரண்டினைப் பெயரிட அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## படிமுறை 03

- செவிமடுத்த கதையிலுள்ள ஒரு சம்பவத்தை சித்திரமாக வரைய சகல மாணவர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்குங்கள்.

## படிமுறை 04

- வரைந்த சித்திரத்துக்குப் பொருத்தமாக வர்ணம் தீட்டி முன்வைப்பதற்கு சகல மாணவர் களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வரைந்த சித்திரத்தின் உள்ளடக்கத்தை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | பாண்டித்தியத்திற்குத் தொலைவில் உள்ளார். |
|---|---|---|---|
| 29.1<br>செவிமடுத்த சிறுவர் பாடலிலுள்ள சம்பவங்கள் இரண்டினைக் கூறுவார். | 29.1.1<br>சரியாக இருத்தல் | சம்பவங்கள் இரண்டினையும் சரியாகக் கூறுவார். | சம்பவங்கள் இரண்டினையும் சரியாகக் கூற மாட்டார். |
| 29.2<br>செவிமடுத்த சிறுவர் பாடலில் வரும் சம்பவங்களுள் ஒரு சம்பவத்தை சித்திரமாக வரைவார். | 29.2.1<br>சித்திரத்தின் ஊடாக சம்பவம் சித்திரிக்கப் படல் | சம்பவம் சித்திரிக்கப் படும் வகையில் சித்திரத்தை வரைவார். | சம்பவம் சித்திரிக்கப் படும் வகையில் சித்திரத்தை வரைய மாட்டார். |

**பாடவிடய உள்ளடக்கம்**

**சிறுவர் கதைகளும் சித்திரங்களும்**

| மொழியின் சமூகப் பணி, கல்விசார் பணி | கற்றற்பேறு | உள்ளடக்கம் | சிறப்பான மொழித்திறன் | செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|---|---|
| ALF/SLF | 30. படங்கள் சிலவற்றின் ஊடாக கதையொன்றினைக் கட்டியெழுப்பி முன்வைப்பார். | **"எம்மைச் சூழவுள்ள பிராணிகள்"** என்ற கருப் பொருளில் இரண்டு பாத்திரங்கள் கொண்டு உருவாக்கப் பட்டதும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய | ▪ செவி மடுத்தல்<br>▪ பேசுதல் | 30.1 தரப்படுகின்ற நான்கு படங்களையும் அவதானித்து ஒவ்வொரு படத்திலும் உள்ளன வற்றை வெளிப் படுத்துவார். | 30.1.1 சரியாக இருத்தல் |
| | | நான்கு சம்பவங்கள் உள்ளடங்கிய துமான நான்கு படங்கள்<br>▪ பாத்திரங்கள்<br>▪ சம்பவம்<br>▪ பாத்திரங் களுக்கும் சம்பவங் களுக்கும்<br>▪ இடையிலான இடைத் தொடர்பு<br>▪ தொடரொழுங்கு<br>▪ எழுத்து வழக்கு | | 30.2 தரப்படுகின்ற நான்கு படங்களுக்கும் சம்பவங் களுக்கும் இடையில் இடைத் தொடர்பு களைக் கட்டியெழுப்பும் வகையில் தொடரொ ழுங்கில் வரிசைப் படுத்துவார். | 30.2.1 படங் களுக்கும் சம்பவங் களுக்கும் இடையில் இடைத் தொடர்புகளு டனிருத்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | ■ விளக்கம்<br>■ தன்னடக்கம்<br>■ உணர்வு வெளிப்பாடு<br>■ மெய்ப்பாடு<br>■ சரியான உச்சரிப்பு<br>■ தொனி வேறுபாடு | | 30.3 தரப்படுகின்ற நான்கு படங் களுக்கும் சம்பவங் களுக்கும் இடையில் இடைத் தொடர்பு களுடன் கதை யொன்றைக் கட்டியெழுப்பி முன்வைப்பார். | 30.3.1 பாத்திரங் களுக்கும் சம்பவங் களுக்கும் இடையில் இடைத் தொடர்பு<br><br>30.3.2 தொனி வேறுபாடு<br>30.3.3 உணர்வு வெளிப்பாடு |

**செயற்பாடு 30.1, 30.2, 30.3** : **படங்கள் ஊடாக கதையொன்றைக் கட்டியெழுப்புவோம்.**

**காலம்** : 1 மணித்தியாலம்

**கற்றல் வளங்கள்** : கதைக்குரிய படங்கள் உள்ளடக்கப்பட்ட QR CODE

**கற்றல் கற்பித்தல் செயன்முறை** :

**படிமுறை 01**

- பின்வரும் படங்கள் நான்கினை ஒழுங்குமுறையின்றி சகல மாணவர்களும் பார்க்கும் வகையில் காட்சிப்படுத்துங்கள்.
- இதற்காக பின்வரும் QR CODE இனைப் பயன்படுத்த முடியும்.
- இந்த ஒவ்வொரு படத்தினையும் உன்னிப்பாக அவதானிப்பதற்கு மாணவர்களை வழிப் படுத்துங்கள்.
- ஒவ்வொரு படத்திலும் உள்ளடங்கியுள்ள விடயங்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர் களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.






**படிமுறை 02**

- படங்கள் நான்கினதும் சம்பவங்களுக்கு இடையில் இடைத் தொடர்பினைக் கட்டியெழுப்பும் வகையில் வரிசைப்படுததும் விதம் பற்றிக் கூறுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- அதற்கமைய படங்கள் நான்கினையும் சரியாக வரிசைப்படுத்துங்கள்.

**படிமுறை 03**

- படங்கள் நான்கின் ஊடாக பாத்திங்கள் மற்றும் சம்பவங்களுக்கிடையிலான இடைத் தொடர்புடன் கதையொன்றைக் கட்டியெழுப்பி முன்வைக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

**படிமுறை 04**

- பின்வரும் நான்கு படங்களையும் பொருத்தமான வகையில் தயார் செய்து சகல மாணவர்களுக்கும் வழங்குங்கள்.
- இதற்காக பின்வரும் QR CODE இனைப் பயன்படுத்த முடியும்.

- ஒவ்வொரு படத்திலும் உள்ளடங்கியுள்ள விடயங்களை வெளிப்படுத்துவதற்கு மாணவர்களுக்கு போதுமான நேரம் வழங்குங்கள்.

உதாரணம் :






### படிமுறை 05

- படங்கள் நான்கினையும் கதையொன்றை உருவாக்கும் வகையில் ஒழுங்குமுறையாக வரிசைப்படுத்தி முன்வைப்பதற்கு சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

### படிமுறை 06

- படங்களின் பாத்திங்களுக்கும் சம்பவங்களுக்கிடையிலான இடைத்தொடர்புடன் கதை யொன்றைக் கட்டியெழுப்பி முன்வைக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

**கணிப்பீடு**

| செயலாற்றுகைத் தர நியமம் | கணிப்பீட்டு நியதி | பாண்டித்தியம் அடைந்துள்ளார். | பாண்டித்தியத்திற் குத் தொலைவில் உள்ளார். |
|---|---|---|---|
| 30.1<br>தரப்படுகின்ற நான்கு படங்களையும் அவதானித்து ஒவ்வொரு படத்திலும் உள்ளனவற்றை வெளிப்படுத்துவார். | 30.1.1<br>சரியாக இருத்தல் | நான்கு படங்களிலும் உள்ளனவற்றை சரியாகக் குறிப்பிடுவார். | நான்கு படங்களிலும் உள்ளனவற்றை சரியாகக் குறிப்பிட மாட்டார். |
| 30.2<br>தரப்படுகின்ற நான்கு படங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையில் இடைத் தொடர்புகளைக் கட்டியெழுப்பும் வகையில் தொடரொழுங்கில் வரிசைப்படுத்துவார். | 30.2.1<br>படங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையில் இடைத் தொடர்புகளு டனிருத்தல் | படங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையில் இடைத் தொடர்பு | படங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையில் இடைத்தொடர்பு |
| 30.3<br>தரப்படுகின்ற நான்கு படங்களுக்கும் சம்பவங் களுக்கும் இடையில் இடைத் தொடர்புகளுடன் கதையொன்றைக் கட்டியெழுப்பி முன்வைப் பார். | 30.3.1<br>பாத்திரங்களுக்கும் சம்பவங்களுக்கும் இடையில் இடைத் தொடர்புகளுட னிருத்தல் | | |
| | 30.3.2<br>தொனிவேறுபாடு | | |
| | 30.3.3<br>உணர்வு வெளிப்பாடு | | |